# எனக்கெனவே... நீ... கிடைத்தாய்!

எங்கேயோ இடிஇடிக்கும் சப்தம் கேட்டது. ஆற்றங்கரையோரம் கால்நனைய நடந்து சென்று கொண்டிருந்தவளை... தட்டி எழுப்பிவிட்டது இடி.

சிந்து திடுக்கிட்டு கண்விழித்தாள்.

ஜன்னல் வழியே அழுக்காய் தெரிந்தது வானம். இரவெல்லாம் பளபளத்துக் கொண்டிருந்த வெள்ளிக் காசுகளை சுத்தமாய் பெருக்கி தள்ளிவிரட்டியிருந்தது மழைமேகம். சுவர்கடிகாரத்தின் ரேடியம் முட்கள் ஐந்தரையை நோக்கி நகர்ந்துக் கொண்டிருந்தன.

'இன்னும் கொஞ்சம் படுக்கலாமா' என கெஞ்சிய சோம்பேறித்தனத்தை போர்வையடன் உதறிவிட்டு வேகமாய் எழுந்தாள்.

பாத்ரூமில் நுழைந்து பிரஷ் பண்ணி. முகம் கழுவிக் கொண்டு வெளியே வருகையில்... நுழைவாசல் திறந்து.. பல்பு எரிந்துக் கொண்டிருந்ததை பார்ததாள்.

ஓ.... அம்மா... எழுந்துட்டாங்களா?

வேமாய் வாசலுக்கு வந்தாள். கமலி நெளி நெளியாய் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். கை வளைந்து நெளிந்து ஓட.. அழகாய் பளிச்சிட்டது கோபம். கமலிக்கு. விதவிதமான... போடவே கடினமான கோலங்கள் எல்லாம் அத்துபடி. அந்த விஷயத்தில் சிந்து அம்மாவின் ரசிகை.

''ஏம்மா.. கோலம் போடறே? வானத்தைப் பார்.. கண்டிப்பா மழை வரும்..''

''மழை வருதோ, வரலியோ... இங்கெல்லாம்.. பொண்ணுங்க காலைல எந்திரிச்சதும்... வாசல் தெளிச்சு கோலம் போட்றணும்!'' அம்மா நிமிராமல் பதில் சொன்னாள்.

'இங்கெல்லாம்.. ' என்ற வார்த்தை.. 'நகர்ந்துப்போ..' என்பதுபோல் ஒட்டாமல் வந்தது.

சிந்துவிற்கு வலித்தது ஆனாலும் சிரித்தாள்.

''காபி'போடவாம்மா?''

'' வேணாம்.. வேணாம்.. நான் வந்து போடறேன்.. அவருக்கு நான் போட்டாதான் பிடிக்கும்!''

**-ஆர்.மணிமாவா**

அவர் என்பது சிந்துவின் தகப்பனார்.

' அம்மாவுக்கு என்னிடம் மட்டும் மனசும். உதடும் ஒட்டவே ஒட்டாதோ?'

உள்ளே வந்தாள்.

ஒரு பிரம்பு கூடையில் முன்தினமே சூப்பர் மார்க்கெட்டிலிருந்து வாங்கி வந்திருந்த மளிகை சாமான்களை எடுத்து சமையலறை மேடை மேல் வைத்தாள். பிளாஸ்டிக் கவர்களை கத்தரித்து. அரிசி, பருப்பு, உளுந்து, கம்பு என்று தனித்தனியே கொட்ட முற்பட்டவள்.. சில கணங்கள் யோசித்து களைமேட்டை உத்தேசித்து சற்று அளவைக் குறைத்துப் போட்டாள்.

கமலி... ஸ்டவ்வில் பாலை வைத்து.. குளிக்க ஓடினாள்.

' அம்மா என்ன டிபன் செய்யப்போகிறாள்?'

சுற்று முற்றும் பார்த்தாள்.

பிரிட்ஜிலிருந்து இட்லி மாவை எடுத்து சமையல் மேடைமேல் வைக்கப்பட்டிருந்தது.

'ஓ. இட்லியோ, தோசையோ... ஏதோ ஒண்ணு. சரி.., சட்னி அரைச்சிடலாம்!'

அம்மாவின் வேலைப் பளுவில் கொஞ்சமேணும் சுமக்க ஆசைப்பட்டு.. தேங்காய் உடைத்து, துருவி, இஞ்சி, மிளகாய், பொட்டுக்கடலை வைத்து மிக்ஸியில் ஓடவிட்டாள்.

வழித்துக் கொட்டி, உப்பு சரிப்பார்த்து தாளித்துக் கொட்டினாள்.

அதற்குள் கமலி வந்துவிட்டாள்.

சிந்தால் சோப்பின் வாசனை அறைமுழுக்க ரம்மியமாய் நுழைந்தது.

லேசான மஞ்சள் பூச்சில் பளபளத்த முகத்தில் அளவான சைஸிஸ் ஸ்டிக்கர் பொட்டு.

அம்மாவின் அழகை ரசித்தாள்.

''என்ன தாளிச்சே?''

''சட்னிம்மா! இட்லிதானே சுடப்போறே? சட்னி அரைச்சிட்டேன்!'' பெருமிதமாய் சொன்னாள்.

''என்ன சட்னி?'' பாத்திரத்தை திறந்துப் பார்த்தாள்.

''தேங்காய்.. பொட்டுக்கடலை சட்னிம்மா!''

''உன்னை யாரு அதிகப்பிரசங்கித்தன்மா இதை அரைக்கச் சொன்னது? அவரு கொத்து மல்லி சட்னியில்லே கேட்டாரு? வீணாக்கறதுக்குன்னே பொறந்தியா நீ.. சை!. '' கமலி அலுத்துக் கொண்டாள்.

' என்னாச்சுன்னு இப்படி கத்தறே? ஊர் உலகத்துல என்னாட்டம் உள்ளப் பொண்ணுங்கல்லாம் கிச்சன் பக்கமே எட்டிப் பார்க்கறதில்லை. ஆனா, வலிய வந்து உதவணும்னு நினைச்சா... இப்படிதான் பேசுவியாம்மா?' என்று பதிலுக்கு உரிமையோடு கத்த நினைத்தாள்.

ஆனால் முடியவில்லை.

அம்மாவின் முகம், அவள் பார்வையில் தெரிந்த அந்நியம்.. அவளால் பேச முடியவில்லை. சிறுதீயில் நன்கு காய்ந்திருந்த பாலில், முன்னமே இறக்கியிருந்த டிகாஷனை விட்டு, அரை ஸ்பூன் சர்க்கரை கலக்கி வைக்

கும்போதே.. சிந்து கேட்டாள்.

''அப்பாவுக்குதானே?''

'ம்'

''நான் குடுத்துட்டு வர்றேன்!''

''வேணாம்....'' சொல்லி முடிக்கு முன்பே டம்ளருடன் அறையை விட்டு வெளியேறி இருந்தாள் சிந்து,

'என்ன இது அதிகப்பிரசங்கித்தனம்?' கமலி சலித்துக் கொண்டாள்.

பனியன், லுங்கியுடன் வராந்தாவில் சேரில் அமர்ந்திருந்தார் விஸ்வநாதன் கையில் தினசரி'

''அப்... அப்பா.. காபி!''

நான்காம் பக்கத்தில் பதிந்திருந்த பார்வையை விலக்கி அவளைப் பார்த்தார்.

கண்களில் எரிச்சல்.

''ம்.. அப்படி வச்சிட்டுப்போ!''

கைநீட்டி வாங்கவில்லை.

சிந்துவிற்கு சின்ன ஏமாற்றம்.

அருகிலிருந்து முக்காலிமேல் காபியை வைத்துவிட்டு சென்றாள்.

அதே நேரம் செல்போன் அழைத்தது.

சார்ஜரில் இருந்தது போன்.

விஸ்வநாதன் எழமுற்பட.... வேகமாய் நடந்து செல்போனை எடுத்து தந்தையிடம் கொடுத்தாள். அவளிடமிருந்து போனை வெடுக்கெனப்பிடுங்கியவர்

''அலோ.. பாஸ்கர்.. எப்படிப்பா இருக்கே? எங்களுக்கென்ன? ஒரு பிரச்சனையும் இல்லே.? சாமுத்ரிகா எப்படியிருக்கா? உன் மாமனார். மாமியார் எப்படியிருக்காங்க? வாயேன்ப்பா... உன்னைப் பார்த்து ரொம்ப நாளாய்டுச்சு. கண்லேயே நிக்கறே பாஸ்கர்.. ம்... அம்மாக்கிட்ட அப்புறமா பேசு... வேலையா இருக்கா'' பேசி முடித்து வைத்தார்.

தன் மகனிடம் செல்போனில் பாசத்தைக் கொட்டிப் பேசிய அவரை ஏக்கத்துடன் பார்த்தாள்.

'என்னை... ஒரே ஒருமுறையாவது உரிமையோட சிந்துன்னு கூப்பிடுப்பா! உன வாயால என் பேரைச் சொல்லி கேக்கணும்னு ஆசையாயிருக்குப்பா!'

'என்ன?' என்பதுப்போல் விஸ்வநாதன் பார்க்க..தயங்கி, பதறி, நகர்ந்துச் சென்றாள்.

''ஏங்க உச்சி வெயிலில் மொட்டைமாடியில் மட்டமல்லாக்க படுத்து இருக்கீங்க?''

''வைத்தியர் தான் சொன்னார்

''வயிற்றை காய'' போட்டால் தான் வியாதி குணமாகும் என்று''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி.



## 2

''அம்மா...'' என்றாள் சிந்து

''ம்.'' என்றாள், திரும்பிப் பார்க்காமலேயே...

''நான் ஏதாவது உதவி செய்யவாம்மா?''

''வித்யாவை எழுப்பி விடு! ஆபீசுக்கு போக நேரமாய்டுச்சு!''

''சரிம்மா!''

சிந்து வேகமாய் சென்றாள்.

தாழிடாமல் வெறுமனே சார்த்தப்பட்டிருந்த கதவைத் திறந்து உள்ளேச் சென்றாள். கட்டிலில் குப்புறப்படுத்து.. கோணல் மாணலான போசில் கிடந்தாள் வித்யா.

சிரித்தபடி அவளருகே அமர்ந்த சிந்து.. பாசத்துடன் அவள் முதுகை தடவிக் கொடுத்தாள்.

அந்த ஸ்பரிசத்தில் விழிப்பு வந்தவளாய்... லேசாய் சிணுங்கி... கண்களைத் திறக்காமலேயே ''குட்மார்னிங் சிந்து'' என்றாள்.

சிந்துவின் உதடுகள் புன்னகையில் அகன்றன.

''எப்படிக்கா.. பார்க்காமலேயே நான் தான்னு கண்டுபிடிச்சே?''

வித்யா சிரித்தபடி எழுந்தமர்ந்தாள்.

''பெரிய விஷயமா இது? என்னை எழுப்பறதே நீயும். அம்மாவும் தான். அம்மாவாயிருந்தா. ''வயசுப் பொண்ணு இவ்வளோ நேரமாவாத் தூங்கறதுன்னு முதுகுல தட்டி தட்டி எழுப்புவாங்க. நீ.. எப்பவும் தாலாட்டற மாதிரி எழுப்புவே.. தட்ஸால்!''

''நான் இப்டி எழுப்பறது பிடிச்சிருக்கா?''

வித்யா.. சிந்துவின் கன்னத்தில் செல்லமாய் தட்டினாள்.

''நீ என்ன செஞ்சாலும் பிடிக்கும்!''

''நிஜமாவா?'' விழிகள் அகல கேட்டாள்.

''யார் மேல்.சத்தியம் பண்ணட்டும்?''

சிந்து அவள் வலக்கரத்தை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்தினாள்.

''இது போதும்க்கா!''

என்றவள், சட்டென நினைவு வந்தவளாய் பதறி,

''ஐயோ மறந்துட்டேன் பாரேன்... எந்திரிக்கா.. டைமாய்டுச்சி பார்.. அம்மா எழுப்பிவிடச் சொல்லி அனுப்பினாங்க.. நான் பாட்டுக்கு ஏதேதோ பேசி.. எந்திரி.. எந்திரி!'' கைப்பற்றி இழுத்தாள்.

''ஏய்..ஏய்.. இரு.. போ... வந்துட்டேன்!''

கையை விட்டவள்... போகாமல் தயங்கி நின்றாள்.

'என்ன?' என்பதுப்போல் பார்தாள்.

''அடுத்தமாசம் உனக்கு கல்யாணமில்லே?''

''ஆமாம்.. அதுக்கென்ன?''

''நான்.. உனக்காக ஒரு பரிசு வாங்கியிருக்கேன். குடுத்தா வாங்கிப் பேயில்லே?''

''நீயா.. எனக்கா?''

''ஏன்க்கா.. வாங்கிக்க மாட்டியா?'' முகம் வாடியது.

''ப்ச்.. அதுக்குச் சொல்லலே.. வந்து.. சரிவிடு.. ஈவ்னிங் அதைப்பத்திப் பேசுவோம்!''

''பேசுவோம்னா? வாங்கிக்க மாட்டியா? நீயுமா என்னை அந்நியமா நினைக்கிறே?''

''சீச்சீ... அந்த அர்த்தத்துல சொல்லலே! நீ என் தங்கச்சி. சின்னப் பொண்ணு! நான்தான் உனக்குத் தரணும். நீ எனக்குத் தரணுமான்னு யோசிச்சேன்!''

''இப்ப நீதானே கல்யாணப் பொண்ணு? கல்யாணப் பொண்ணுக்கு தானே பரிசுத் தரணும்!''

''பெரிய மனுஷி.. தர்றேன்னும்போது மாட்டேன்னு சொல்லக் கூடாதே! சரி.. இப்பவேகுடு!..''

''ஹ்ஊம்.. ஈவ்னிங் வியாபாரம் முடிஞ்சு வரும்போதுதான் வாங்கிட்டு வருவேன்!''

''ஒருவேளை... கம்பு தோசையும், பணியாரமுமா?''

''போக்கா..'' வெட்கப்பட்டாள் சிந்து.

''அம்மாவை டீ ரெடி பண்ணச் சொல்லு சிந்து, நான் பிரஷ்பண்ணிட்டு வந்துடறேன்.!''

''சரிக்கா''

அடுத்த ஐந்தாவது நிமிடம் வித்யா முகமும் கழுவிக் கொண்டு, துவாலையால் துடைத்துக் கொண்டு கிச்சனிற்குள் வந்தாள்.

''அம்மா... டீ!''

''வா.. ரெடியாயிருக்கு!'' வடிகட்டியில் டீயை இறக்கி டம்ளரில் நிறைத்தாள்.

சிந்து கிரைண்டரில் அரிசியை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

இஞ்சியும், ஏலமும் மணத்த டீயை எடுத்து சுவைத்தாள் வித்யா..

''சூப்பர்.. '' என்று ரசித்துப் பருகினாள்.

''குளிச்சிட்டு வந்துடுடி.. டிபன் ரெடியாயிருக்கு!''

''என்னம்மா டிபன்?''

''இட்லியும் கொத்துமல்லி சட்னியும்!''

''ஐயோ.. எனக்குதான் கொத்துமல்லி சட்னி பிடிக்காதே! தேங்காய் சட்னி இல்லையா?''

''தேங்காய் சட்னிதானே? நான் அரைச்சு வச்சிருக்கேன்க்கா! எங்கேம்மா?'' மேடையில் ஒவ்வொன்றையும் திறந்துப் பார்த்துத் தேடினாள் சிந்து செய்துக் கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு ஆவலாய் தேடியதை கண்டு முகம் மாறினாள் கமலி.

''இப்ப என்ன? எனக்கு எடுக்கத் தெரியாதா? இல்லை.. இப்பவே அவ சாப்பிட உக்காந்துடப் போறாளா? போய் உன் வேலையைப் பார்!''

அம்மா எரிந்து விழ.. சிந்துவின் முகம் வேதனையில் வாட.... நகர்ந்தாள்.



வித்யாவுக்கு பார்க்கவே சங்கடமாயிருந்தது.

''உங்கப்பா கேட்டார்னு கொத்துமல்லி சட்னி அரைச்சேன் வித்யா..!''

''சரி.. விடு.. நாளைக்கு ஆப்பம் செய்யேன்ம்மா! சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு!''

'' செய்யறேன்டி! ஹ்ஊம்.. ஒரு காலத்துல நம்ம வீட்ல.. தினமும் மூணு நாலுவகை டிபன் செய்வோம். சொந்தக்காரங்க தினமும் நம்ம வீட்ல வந்து சாப்பிட்டுப் போவாங்க.! பணத்தை படியால அளந்த குடும்பம் இது! எல்லாம் போச்சு! இந்நேரம் உன் கல்யாணத்துக்கு குறைந்தது முன்னூறு பவுனாவது போட்டிருப்போம். இப்ப.. முப்பது பவுனுக்கே.. எந்த செலவை குறைச்சு சரிக்கட்டலாம்னு பட்ஜெட் போடற நிலைமை! எங்களுக்கு வந்து தரித்திரமா..''

அம்மா அடுத்த வார்த்தை பேசுமுன் வித்யா சுதாரித்துக் கொண்டாள்.

''பழசெல்லாம் எதுக்கும்மா? மனசுதான் புண்ணாகும். லஞ்ச் என்னப் பண்ணியிருக்கே?''

''நேத்தே.. வெஜிடபிள் புலாவ் பண்ணச் சொன்னியே''

''தாங்க்ஸ்ம்மா.. அம்மான்னா.. அம்மாதான்!'' அம்மாவின் கன்னத்தை செல்லமாய் பிடித்துக் கிள்ளி ஆட்டிக் கொஞ்சினாள்.

அதைப் பார்த்த சிந்துவிற்கும்.. அம்மாவின் பக்கத்தில் ஒட்டி நின்றுக் கொண்டு இழைய வேண்டும் போல் ஏக்கம் எட்டிப் பார்த்தது.

காமாட்சி டிபன் சென்டர்!

பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. மாலை மூன்று மணியானால்... அந்த டிபன் சென்டரில் மனிதத் தலைகள் மொய்க்கும்.

காஞ்சிபுரம் உழவர் சந்தையையொட்டி, கலெக்டர் அலுவலகமும் இருந்தது. மாலை நேர டிபனுக்காக.. கிராமத்து அசல் சுவையோடு, பாரம்பரிய உணவு வகைகளான குழிப்பணியாரம், கோதுமைப்புட்டு, கம்பு தோசை, காஞ்சிபுரம் இட்லி, சோளதோசை, உளுந்தங்கழி, தவிர, காபி, டீ, கேழ்வரகு கஞ்சி.. எல்லாமே அங்கு கிடைக்கும்.

சம்பாதிப்பவர்கள், ஆரோக்கியமான, சத்தான சுவையான உணவு வகைகள் கிடைத்தால் சும்மா விடுவார்களா?

ആரம்பித்த ஒரே வாரத்தில் வியாபாரம் சூடுபிடித்து விட்டது.

## 3

உழவர் சந்தையில் அதுபோல் இன்னும் இரண்டு கடைகள் இருந்தாலும்.. கூட்டம் என்னவோ இங்கு தான் படையெடுக்கும்.

சுடச்சுட விநியோகம் நடந்தது. பத்து டேபிள்! ஒவ்வொரு டேபிளைச்சுற்றி நான்கு சேர்கள் எல்லாமே நிறைந்திருந்தன.

தேவாவும், திவாகரும் காரிலிருந்து இறங்கினர். முகமும், உடையும், மெத்தப்படித்த நகரவாசிகள் என்று கூறின. கூடவே பின்பக்க கதவைத் திறந்து ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்த ஊர் பஞ்சாயத்து தலைவரும்

இறங்கினார்.

'ஹோட்டல்னு சொன்னீங்களே சார். பார்க்க... அப்படியொண்ணும் தெரியலியே!'' கன்னத்தை சொறிந்தபடி சற்றே உதடைப் பிதுக்கி சொன்ன தேவாவுக்கு போன வாரம்தான் இருபத்தியேழு வயது பிறந்தது.

''வாய்க்கு ருசியா சாப்பிடணும்னு ஆசைப்பட்டா..தைரிமா இதுக்குள்ளே நுழையலாம். ஆனா கண்டமேனிக்கு சோளாபூரி, பஜ்ஜி, போண்டான்னு எதிர்பார்க்காதீங்க. அருமையான கிராமத்து அயிட்டம், வந்து சாப்பிட்டுதான் பாருங்களேன் தம்பி. டைரக்டர் நீங்க வித்தியாசமான சிந்தனைக் கொண்டவங்க. இதுவும் வித்தியாசமான சாப்பாடுதான். உங்க சிட்டியில இதையெல்லாம் கண்ணாலக் கூட பார்த்திருக்க மாட்டீங்க.. வாங்க தம்பி!'' என்று அழைத்தார் பஞ்சாயத்து தலைவர்.

''இவ்ளோ சொல்லும்போது.. விஷயம் இல்லாம இருக்காது.. வாங்க.. வா. திவா..!''

உள்ளே சென்றதும் ஒரு டேபிள் காலியாக இவர்கள் மூவரும் அமர்ந்தனர்.

''எப்படியோ... டாகுமெண்டரி படத்தை இங்கே வந்து எடுத்து முடிச்சிட்டீக? அப்பா சொன்னார்னதும் தான்.. சிரமப்பட்டு.. பழங்கால கோவிலில் ஷூட்டிங் எடுக்க பர்மிஷன் வாங்கிக் குடுத்தேன். இங்கே கொஞ்சம் ஊர்க்கட்டுப்பாடு அதிகம்..''

''தெரியும் சார்! ஆனா.. அந்த ஸ்பாட் ரொம்ப அவசியமா இருந்துச்சு. எனிவே.. தாங்க்யூ ஸோ.. மச்..!'' என்று அவரின் கைப்பற்றி சிரித்த தேவா.. பளிச்சென வசீகரமாயிருந்தான்.

திவாகர் அந்த பேச்சில் கலந்துக் கொள்ளாமல்.. தட்டில் இருந்த பண்டங்களை ஆவலாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் தேவாவின் நண்பன் மட்டுமல்ல.. ஒளிப்பதிவாளனும் கூட.

''அடுத்து என்னப் பண்ணப்போறீங்க தம்பி?''

''ஒரு விளம்பரப்படம். இன்னும் ரெண்டு வாரத்துல ஷூட்டிங்! அநேகமா.. அதையும் இந்த ஊர்ல வச்சுதான் எடுக்கணும்னு திட்டம்.''

''நல்லது.. நல்லது! தம்பி.. பெரிய சினிமாப்படமெல்லாம் எடுக்கணும்னு ஆசைப்படலையோ?''

''இதுவரைக்கும் இல்லே.. அட... நீங்க சொன்னது சரிதான் சார். இந்த புட்டெல்லாம் ரொம்ப டேஸ்ட்டியா இருக்கே? என்ன திவா.. எப்படி இருக்கு?''

''எல்லாத்திலேயும்.. இன்னொரு பிளேட் கொண்டு வரச்சொல்லுப்பா... எக்ஸலண்ட்! இப்படியெல்லாம் கூட டிபன் வகை இருக்குமா என்னன்னு ஆச்சரியமாயிருக்கும்.''

பஞ்சாயத்து தலைவர் வாய்விட்டு சிரித்தார். ''நான் அப்பவே சொல்லலே? அம்மாடி.. சிந்து.. எல்லாத்திலேயும் இன்னும் ரெண்டு பிளேட் கொண்டு வரச்சொல்லு!''

தலைவர் குரல் கொடுக்க.. திரும்பி பார்த்து தலையாட்டிய சிந்துவை..



கேழ்வரகு புட்டை வாயில் வைத்து பார்த்த தேவா.. ஒருகனம் இமைக்க மறந்தான்.

மழை வலுத்திருந்தது. பெரிய... பெரிய ஊசிகளால் பூமியை துளைப் போட்டுக் கொண்டிருந்தன. காற்றும் அதிகம்தான். வேகமாய் விசிறியதில் மரங்கள் பேயாட்டம் ஆடின.

வேன் விஸ்வநாதன் வீட்டு முன் நின்றது. சற்றே பாத்திரங்களை இறக்க. கடையில் வேலை செய்யும் முத்து, மகேந்திரன், இருவரும் காலி பாத்திரங்களை இறக்கி ஒரு ஓரமாய் வைத்தனர்.

''வர்றோம் தங்கச்சி..!''

தலையாட்டிய சிந்து.. டிரைவரிடம் வேன் வாடகைக்கான பணத்தைக் கொடுத்தாள்.

அவர்களிருவரையும் சுமந்தபடி வண்டி வேகமெடுக்க.. சிந்து.. வெளி வாசலில் செருப்பை கழற்றிப் போட்டாள். உள்ளே சிரிப்பு சத்தம் பலமாய் கேட்டது.

'அப்பாவுக்கு புரையேறிக்கற அளவுக்கு சிரிக்கக் கூடத் தெரியுமா..?'

வியப்புடன் உள்ளேச் சென்றாள்.

விஸ்வநாதன் சோபாவில் அமர்ந்திருக்க.. கீழே அமர்ந்திருந்த கமலி சேலைத் தலைப்பால் சிரிப்பை அடக்க வாயைக் பொத்தியிருக்க.. அவள் மடியில் வித்யா.

''எங்கேருந்துடி கத்துக்கிட்ட.. இப்படி ஜோக்கெல்லாம் அடிக்க?'' அம்மா, மகளின் தலையை பெருமிதமாய் தடவியபடிக் கேட்டாள்.

''என் கூட வேலைப் பார்க்கிற சீதாங்கிற லேடிக்கு.. வாயத்திறந்தாலே ஜோக்குதாம்மா! லொட லொடன்னு எதையாவது டைமிங்கா பேசிக்கிட்டே இருப்பாங்க..

அட.. சிந்து.. வந்துட்டியா? வா.வா உனக்காக தான் காத்திருக்கேன். நீ பாட்டுக்கு சர்ப்பரைஸ்னு சொல்லிட்டியா? ஆபீஸ்ல போய்.. என்னவாயிருக்கும். என்னவாயிருக்கும்னு யோசிச்சு.. மூணு காபி குடிச்சிட்டேன். அம்மா.. தெரியுமா..! சிந்து எனக்கு கல்யாணத்துக்காக என்னவோ பரிசு வாங்கி வச்சிருக்காளாம்.'' வித்யா எழுந்து அவளருகே வந்தாள்.

விஸ்வநாதன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொள்ள.. கமலி சலனமின்றி அங்கு நடப்பவைகளை பார்த்தாள்.

அக்காவின் ஆர்வம் சிந்துவை தொற்றிக் கொள்ள.. முகம் கொள்ளா புன்னகையுடன், தோளில் மாட்டியிருந்த பேகைத் திறந்து ஒரு பாக்ஸை எடுத்தாள்.

வித்யா புருவம் மேலேற தங்கையைப் பார்க்க.. திறந்து காட்டினாள்.

பச்சையும், சிவப்பும், முத்தும் கலந்த.. கற்கள் பதித்த ஒரு ஜோடி வளையல்கள்.

''ஏய்.. என்ன இது?''

'' புடிச்சிருக்காக்கா?''

''சூப்பராயிருக்கு!'' விழிகளில் மின்னல்.

''கவரிங்கா?'' கமலி ஆவலை வெளிக்காட்டாமல் எட்டிப்பார்த்தாள்.

விஸ்வநாதன், ஏற்கனவே படித்து முடித்திருந்த தினசரியை விரித்து வைத்துக் கொண்டார்.

அம்மா கேட்ட கேள்வியில் சிந்துவின் முகம் சூம்பியது.

''இல்லேம்மா.. தங்கம் தான்! மொத்தம் நாலு பவுன்!''

''....?!!''

''கோல்டா? நீ எப்படி இவ்வளோ விலை கொடுத்து வாங்கினே? இன்னைக்கு விக்கிற விலைக்கு.. அறுபத்தஞ்சாயிரத்துக்கு மேலே ஆகியிருக்குமே!''

''கடையில நல்ல வருமானம்க்கா! மினிடார் வேன் வாங்க பேங்க்ல லோன் கேட்டிருக்கேன். கிடைச்சிடும். உனக்கு வாங்கிக் குடுக்கறதுக்கு விலையெல்லாம் பெரிய விஷயமா? பிடிச்சிருக்கில்லே.. அது போதும்!''

பூரிப்புடன் உள்ளேச் சென்ற சிந்துவை ஆறுஜோடிக் கண்களும் வியப்புடன் பார்த்தன.

## 4

ஓயாமல் அழுத வானத்தைப் பார்த்து டமடமவென.. இரக்கமற்று கைகொட்டி சிரித்தன இடிகள்.

உறக்கம் வராமல் புத்தகம் படித்துக் கொண்டிருந்த வித்யாவுக்கு போரடிக்கவே.. மூடி வைத்து விட்டு எழுந்தாள். அறையின் ஜன்னல் காற்றுக்கு நடனமாட.. இழுத்து கொக்கிப் போட்டு மூடியவள்... ஏதோ தோன்றியவளாய் ஹாலுக்கு வந்தாள்.

பழங்காலத்து வீடு. கைவிட்டுப் போகாமல் இன்னும் பாசமாய் அவர்களுடனே இருக்கிறது. சினிமாவில் நடிக்கும். பழங்கால வீடுகளைப் போன்றே.. பெரிய வராந்தா.. நடுவில் வானம் பார்த்த முற்றம்.. சிறுவயதில் இதுபோன்ற மழைகாலத்தில் அவளும், பாஸ்கரும், காகித கப்பல் விட்டு விளையாடியது நினைவிற்கு வந்தது.

சமையலறை, பூஜையறை, குளியலறை தவிர்த்து மூன்று படுக்கை அறைகள் உண்டு. அம்மா, அப்பாவுக்கொன்றும், வித்யாவுக்கு ஒன்றும், பாஸ்கருக்கு ஒன்றுமாய் இருந்தன. பாஸ்கர் இப்போது இங்கில்லை என்றாலும்.. அவன் வரும்போது இங்குதானே தங்குவான்? என்று சிந்துவிற்கு மறுதலிக்கப்பட்டது.

குளிரில் உடல் சிணுங்க.. இன்னும் போர்வைக்குள் குறுக்கிக் கொண்டு வராந்தாவின் ஒரு ஓரத்தில் பாய்மீது பாவிக்கிடந்தாள் சிந்து.

மெல்ல அவளருகே அமர்ந்தாள் வித்யா!

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அவளின் முகம் இரவு விளக்கொளியில் பேரழகாய் தெரிந்தது.

அவளை இரக்கத்தோடும், நன்றியோடும் பார்த்தாள் குழந்தை முகம் கன்னத்தோரம் நெளித்த முடிக்கற்றையை மென்மையாக ஒதுக்கிவிட்டாள்.

சொந்த வீட்டிலேயே ஒதுக்கப்பட்டிருக்கும் பரிதாபம் ஏன்?

வித்யாவிற்கு கசப்புடன் பழையவைகள் மேலெழுந்தன.



விஸ்வநாதன் அந்த ஊரிலேயே செல்வாக்கு மிக்க தொழிலதிபர், பஞ்சாலையும், பேப்பர் மில்லும், ரைஸ் மில்லுமாய் கொடிகட்டிப் பறந்தவர். தொழிலில் ஏகமாய் போட்டிகள் இருந்தாலும் மிக எளிதாய் கையாண்டு வெற்றிக் கனி பறிப்பவர்.

தெய்வபக்தியும், அதைவிட அதிகமாய் ஜோதிட பக்தியும் மிகுந்திருந்தது. வீட்டில் தண்ணீர் குடத்தில் எவ்வளவு தண்ணீர் பிடிக்க வேண்டும் என்பதைக் கூட ஜோதிடரிடம் கேட்டுதான் செய்கிறாரோ என்கிற அளவிற்கு பித்துப்பிடித்தவர்.

மனைவியாய் கமலி வந்தபிறகு மகாலட்சுமி அவர் வீட்டின் படியேறி அமர்ந்தாள். பாஸ்கர் பிறந்தபோது.. புதிதாய் தொழில்களை ஆரம்பித்தார். நான்கைந்து வருடம் கழித்து வித்யா பிறந்தபோது செல்வாக்கில் ஸ்திரமாய் இருந்தார். தங்கமும், வைரமும் பீரோவுக்குள் அமர இடமின்றி திமிறின.

மூன்றாவதாக கமலி உண்டானபோது பாஸ்கருக்கு எட்டுவயது. வித்யாவுக்கு ஐந்து வயது.

விழுப்புரத்தில் நூறு ஏக்கர் விலைக்கு வருவதை பார்ப்பதற்காக காரில் சென்றபோது... எதிரே வந்த வேன் மோதி. கார் உருண்டு, புரண்டு நின்றது. நல்லவேளை.. உயிருக்குச் சேதமில்லை. ஆனால் காலிலும், கையிலும் விஸ்வநாதனுக்கு நல்ல அடி. டிரைவருக்கு தலையில் அடி!

காயத்துக்கு சிகிச்சை எடுத்துக் கொண்ட மறுநிமிடமே தன் ஆஸ்தான ஜோதிடரை தேடிச் சென்றார்.

'உன் மனைவி,... கரு உருவான நேரம் சரியல்லை. அது பிறந்தால்.. உன் செல்வம் மட்டுமல்ல... நீயும் மண்ணாகிப்போவாய்., அதன் முதல் அடிதான் விபத்து' என பயமுறுத்த ... கமலியிடம் எல்லாவற்றையும் சொல்கிறார். கருகலைப்பு மாத்திரை வாங்கித்தருகிறார். மனமில்லா விட்டாலும்.... கணவன் முக்கியமாயிற்றே என்று உட்கொள்கிறாள். கரு அசையவில்லை. காரமாய் கோழிக்குழம்பு செய்து சாப்பிடுகிறாள். கலையவில்லை. மூன்று மாதம் முடிந்த நிலையில் அபார்ஷனும் பண்ண முடியாத சூழல். அடிவயிற்றில் கனமும், நெஞ்சில் பயமுமாய் கமலி சுமக்க.. விஸ்வநாதனுக்கு முகம் தெரியாத குழந்தை மீது ஏகமாய் வெறுப்பு. உயிர் பயம்.. அவரை தொழிலில் கவனச்சிதைவை உண்டாக்க.. தோல்விகள் எட்டிப்பார்க்க ஆரம்பித்தன. ஒன்பது மாதங்கள் முடிந்த நிலையில் இன்ஷ்யூர் செய்யப்படாத அத்தனை தொழிற்சாலைகளும் எதிரிகளால் ஒரே நேரத்தில் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரே நாளில் அடிமட்டத்தில் இருந்த நகைகளும் தொழில்களுக்காக வங்கியில் வாங்கப்பட்ட கடன்கள் ஏப்பம் விட்டன.

விஸ்வநாதன் இடிந்துப் போய்விட்டார். பிரசவ நாளுக்கு முன்பே வலி ஏற்பட்டு குழந்தையை பெற்றெடுத்தாள் கமலி.

விஸ்வநாதன் அதன் முகம் காண பிடிக்காமல்.. ஹாஸ்பிட்டல் பக்கமே வரவில்லை. கமலி அதற்காக வருத்தப்படவில்லை. அவளுக்கே கூட அந்த குழந்தைமீது எந்தவித ஈர்ப்பும் ஏற்படவில்லை. அதைவிடக் கொடுமை.. தாய்ப்பாலே சுரக்கவில்லை என்பதுதான்.

பாட்டில் பால்தான் அதைக்கூட கமலியின் தாய் காமாட்சி புகட்டிய

துதான்!

வீட்டிற்கு வந்தப் பிறகும் கூட விஸ்வநாதனின் மனசு மாறவில்லை. கணவனின் தாடியும், கவலையும் கமலியின் கொஞ்ச நஞ்ச தாய்ப்பாசத்தையும் கரைத்தே விட்டன. குழந்தை அழும்போதெல்லாம்.. தீக்கிரையான சொத்துக்களே நினைவுக்கு வந்தன.

ஒருநாள்.. கமலி குளித்துக் கொண்டிருக்க. காமாட்சி கடைக்குச் சென்றிருக்க.. தூளியில் படுத்திருந்த குழந்தை பசிக்காக வீறிட்டு அழ... சுற்று தூரத்தில் சேரில் அமர்ந்து பின்னந்தலையில் இருகைகளைக் கோர்த்து கண், மூடி சோகத்தில் ஆழ்ந்திருந்த விஸ்வநாதன்... அதை கண்டுக் கொள்ளவேயில்லை.

காமாட்சி வந்துபார்த்தபோது.. குழந்தை கண்கள் செருகி. வலிப்பு வந்திருந்தது. கதறிக் கொண்டு, குழந்தையை தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினாள்.

டாக்டர் அவளைத் திட்டியபடி சிகிச்சையளித்துக் காப்பாற்றினார்.

வீடு திரும்பிய காமாட்சி மருமகனிடம் கோபமாய் கேட்டாள்.

''உங்களுக்கு மனசாட்சியே இல்லியா மாப்பிளே? குழந்தை வலிப்பு வரவரைக்கும் அழுதிட்டிருக்கு. அதைத் தூக்கணும்னு கூடவாத் தோணலை?''

''சனியன்.. சாகட்டும்னுதான் தூக்கலே! மறுபடி எதுக்கு இங்க கொண்டு வந்தீங்க? அதை எங்கனாச்சும் ஆறு குளம்னு வீசிட்டு வாங்க... என் உயிராவது மிஞ்சட்டும்.!''

கமலி அதைக்கேட்டு விசும்பியது கணவனுக்காகவா, குழந்தைக்காகவா என்று காமாட்சிக்கு விளங்கவில்லை. ஒரு முடிவுக்கு வந்தாள்.

''பாசத்துக்கும் பாலுக்கும் வழியில்லாத இந்த வீட்ல என் பேத்தி இருக்க வேணாம்... அவளை வளர்க்கிற அளவுக்கு என் உடம்புல தெம்பு மிச்சமிருக்கு. நான் வளர்த்துக்கிறேன்.'' என்று அன்று தன் வீட்டிற்கு தூக்கி வந்தாள் காமாட்சி.

காமாட்சிக்கு கமலி தவிர முகுந்தன் என்ற மகனும் உண்டு. மகன், மருமகள் தீபா, குழந்தைகள் பிருந்தா, வினிதா என்று கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தனர். அவர்களுடன் சிந்துவும் சங்கமம் ஆனாள்.

சிந்து பிறக்கும் போது சற்றே நிறம் மட்டம். காமாட்சி பேத்திக்கு கஸ்

''நம்ம டாக்டர் சினிமா எடுக்கத் துணிஞ்சிட்டார்.''

''படத்துக்கு என்ன பேராம்?''

''நடுநிசி நோய்கள்''

-அ.ராஜப்பன்,
கருமத்தம்பட்டி.





தூரி மஞ்சள், ரோஜா இதழ்கள், பச்சைப்பயிறு என கலந்து குளிப்பாட்டி ஜொலிக்க வைத்தாள்.

முகுந்தனும், தீபாவும் கூட அவளைக் கொண்டாடி வளர்த்தனர். ஆனாலும் பெற்றோர் அரவணைப்பின்றி ஏக்கத்துடன் வளர்ந்தாள் சிந்து.

## 5

காமாட்சி மருமகள் வீட்டிற்கு செல்லும் போதெல்லாம் சிந்துவை உடன் அழைத்துச் செல்ல தவறுவதில்லை. விஸ்வநாதனின் முகம் அவளைப் பார்த்தாலே கடுப்பாகும். கமலியோ ரெண்டுங்கெட்டவளாய் தவிப்பாள். தவிர்த்தாள்.

பாஸ்கரும், வித்யாவும் ஜாலியாய் கேரம் விளையாடுவதை ஏழு வயது சிந்து தயக்கத்துடன் தள்ளி நின்று பார்ப்பாள்.

'' ஏய் எப்படியிருக்கே? எங்க கூட விளையாட வாயேன். '' என்று தோழமையாய் தான் அவளிடம் பேசமுடிந்ததே தவிர தங்கை என ஒட்ட முடியவில்லை.

சிந்துவுக்கோ அண்ணாவின் மடியில் அமர வேண்டும். அக்காவின் மடியில் படுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடன் கண்ணாமூச்சி ஆட வேண்டும் என்று கொள்ளை ஆசை!

காமாட்சி ஏதாவது சாக்கு போக்கு சொல்லி சிந்துவை அங்கே விட்டு விட்டு இருட்டும் நேரத்திற்கு தான் வருவாள்.

ஆனால் சிந்துவுக்கு தான் தர்ம சங்கடமாக இருக்கும். விஸ்வநாதன் தன் பக்கத்தில் பாஸ்கர், வித்யாவை அமர வைத்து ஒன்றாக உணவருந்தி தான் பழக்கம். கமலி கணவருக்கு பயந்து சிந்துவை சமையல் கட்டிலேயே அமர வைத்து தட்டில் சாப்பாடு வைத்து ''இங்கேயே சாப்பிடு! ஏதாச்சும் வேணுமின்னா கூப்பிடு சரியா? '' என்று விருந்துக்கு வந்த உறவினரின் பெண் போல... உபசரிப்பாள்.

எட்டி எட்டி அவர்களை பார்த்துக் கொண்டே சாப்பிடுவதிலும் கூட அந்த சின்னப் பெண்ணிற்கு ஒரு வித திருப்தி ஏற்பட்டதென்னவோ உண்மை!

அன்றைக்குப் பார்த்து தான் விஸ்வநாதனும் தன் இரண்டு குழந்தைகள் மீதும் அதிகப்படியாய் அன்பை கொட்டுவார்கள். கை நிறைய திண்பண்டங்கள் வாங்கி வந்து சிந்துவின் எதிரிலேயே மற்ற இருவருக்கும் தருவார்.

பாஸ்கர் தான் சிரிப்பான்.

'' என்ன டாடி நீங்க? நான் என்ன சின்னக் குழந்தையா? இப்பவும் காராசேவு, மிக்ஸர் வாங்கி வந்து தர்றீங்க? '' என்றான் கரகர குரலில் பத்தாவது படித்துக் கொண்டிருந்த பாஸ்கர்.

'' எத்தனை வயசானா என்ன? நீங்க ரெண்டு பேரும் என் செல்லக் குட்டிங்க தான்! '' என்ற படி சிந்துவை பார்த்து முறைக்க... தூணின் பின்னால் உடலை மறைத்துக் கொள்வாள்.

அப்பா அங்கிருந்து நகர்ந்த பின் பாஸ்கர் அவளை அழைப்பான்.

'' ஏய் பாப்பா இங்கே வாயேன்! ''

வந்தாள்.

''சாப்பிடறியா? ''

'' வேணாண்ணா... அப்பா திட்டப் போறார்! '' என்று எச்சரிப்பாள் வித்யா.

சிந்து வேண்டாமென தலையாட்டி மவுனமானாள்.

அங்கு நடக்கும் விஷயங்கள் கமலியை உறுத்தவே செய்யும். ஆனாலும் அவள் கரம் பற்றி மடியில் அமர்த்தி கன்னத்தை வருட... ஏதோ தயக்கம் தடுத்தது.

இப்படியே நாட்கள் நகர... சிந்து பெரிய மனுஷியான போது மூன்றாம் மனுஷி போல் தான் கமலியால் சென்று வர முடிந்தது. அப்போதும் விஸ்வநாதன் செல்லவில்லை.

முகுந்தன் நல்லவன் தான். அரசாங்க உத்யோகம் பார்ப்பவன். ஆனாலும் சமய சந்தர்ப்பம் பொல்லாததாயிற்றே. நாக்கு திடீரென்று தேவையில்லா வார்த்தையை கொட்டுமே! யாராலும் பேத்திக்கு ஒரு பேச்சு வந்துடக் கூடாதென்பதில் உறுதியாய் இருந்த காமாட்சி. அவளின் தேவைகளுக்காக உழைத்தாள்.

காமாட்சிக்கு அருமையான கைமணம். சமையலில் ராணி! காலை, மாலை வேளைகளில் எல்லா வகை பலகாரமும் செய்து விற்பாள். அந்த வருமானம் தான் பேத்தியை இளவரசி போல் வளர்க்க உதவியது படிக்க வைத்தது.

முகுந்தனும் அம்மாவின் குணம் புரிந்து நடந்து கொண்டான்.

'இவங்களும் உன் பேரப்பிள்ளைங்க தானே? அதுங்களுக்கு இதெல்லாம் வாங்கித் தரணும்னு தோணாதா? ' என்று சங்கடமாய் கேட்டு, அம்மாவின் உழைப்பை அதிகப்படுத்தியதில்லை. மாறாக, அவனும் தன் குழந்தைகளுக்கு எதை வாங்கினாலும் சிந்துவிற்கும் சேர்த்து வாங்குவான்.

சிந்து, பிருந்தா, வினிதாவுடன் விளையாடுவாள். பாட்டியுடன் இருந்த நேரம் அதிகம். பாட்டி சமைப்பதை வேடிக்கை பார்ப்பது தான் பிடித்த பொழுதுபோக்கு. அவள் முந்தானை வாசத்திலே உறங்கி தான் பழக்கம். அப்படிப்பட்ட உறவுச் சங்கிலி ஒருநாள் உடைந்தது.

ஒவ்வொரு மனித உயிரும் இலையின் நுனியில் ஒட்டிக் கொண்டிருக்கும் பனித்துளி போல் தான். எப்போது உதிரும் என்று சொல்ல முடியாது.

அப்படித்தான் காமாட்சியும் ஒருநாள் உறக்கத்திலேயே இந்த உலகை விட்டுப் போயிருந்தாள்.

சிந்துவிற்கு ஒன்றுமே புரியவில்லை, அந்த பதினைந்து வயதில் உலகம் ஒரு பெரிய அரக்கனாக பயமுறுத்தியது. இனி யார் எனக்காக என்ற கேள்வி அந்த பெண்ணை சுழன்றடித்து சுருட்டிப் போட்டது.

விஸ்வநாதன், கமலி, பாஸ்கர், வித்யா எல்லோரும் வந்தார்கள்.

சிந்து அழுதழுது களைத்து கரைந்துப் போனாள். அவளுக்கு ஆறுதல்



சொல்லத்தான் யாருமில்லை.

காரியம் முடிந்தது.

கமலியும், விஸ்வநாதனும் புறப்பட்டனர்.

தீபா வியப்புடன் அவர்களைப் பார்த்தாள்.

'' அண்ணி''

'' சொல்லு தீபா. ''

'' என்னண்ணி நீங்க பாட்டுக்கு கிளம்பிப் போறீங்க? ''

'' வீட்ல வேலையிருக்கு தீபா. இல்லேன்னா இன்னும் நாலைஞ்சு நாள் இருந்துட்டுப் போவேன். ''

'' நான் அதைக் கேக்கலை அண்ணி. இவளை இங்கேயே விட்டுட்டுப் போறீங்க? ''

கமலி திடுக்கிட்டு கணவனைப் பார்க்க, விஸ்வநாதனின் முகம் மாறியது.

''ஆமாங்கக்கா! அம்மா இருந்தவரைக்கும் சரி. அவங்களே போய் சேர்ந்துட்டாங்க. ''முகுந்தனிடமிருந்து தயக்கமாய் வெளிப்பட்டன வார்த்தைகள்.

சிந்து கமலியின் அருகில் வந்து நடுங்கும் விரல்களால் அவள் கைகளைப் பற்றினாள்.

'' வந்திடறேன்மா. '' சிந்து அழுதபடி கேட்க... கமலியும் அழுதாள்.

'' இதிலே யோசிக்க என்னயிருக்கு? அது உங்க பிள்ளை! உங்க கூட இருக்கிறது தானே நியாயம்? ஏதோ காமாட்சியால முடிஞ்சது. பதினைஞ்சு வருஷமா தாங்கிப் பிடிச்சு வளர்த்திருக்கா. முகுந்தனுக்கும் ரெண்டு பொட்டப்புள்ளைங்க இருக்கே? உங்க பாரத்தை அவன் தோள்ல வைக்கிறது நியாயமில்லையே? '' ஊரார் ஆளாளுக்குப் பேச...

விஸ்வநாதன் சினத்துடன் மனைவியைப் பார்த்து தலையாட்டுகிறார்.

'சனியனை கூட்டிட்டு வா. ' என்பது போல.

## 6

இதுவரை அவள் உணர்ந்திராத உணர்வு அது! பாட்டி இறந்தது பெரிய துக்கம் தான்! ஆனால் வறண்டிருந்த தொண்டைக்குள் அமுதம் இறங்கினால் எப்படியிருக்கும்? இனி எப்போதுமே அம்மா, அப்பாவுடன் இருக்கலாம். அம்மா முகம் பார்க்க மாட்டோமா? என பாட்டி அழைத்துச் செல்லும் நாட்களுக்காக இனி ஏங்கி காத்திருக்க தேவையில்லை.

சிந்து உற்சாகமாயிருந்தாள்.

விஸ்வநாதனுக்குத் தான் ரத்தக் கொதிப்பு அதிகமாயிற்று. தனிமையில் பேசுவது வாடிக்கையானது. அதுவும் கோபமாக...

கமலி ' இவள் வந்திருக்க வேண்டாமோ? ' என கவலைப்பட்டாள்.

பாஸ்கர் எம்.பி.பி.எஸ். படித்துக் கொண்டிருக்க வித்யா பி.பி.ஏ. பைனல் இயர்.

வந்த அன்று சிந்து தவித்தாள்.

பாட்டியிருந்த வரை அவளை கட்டிப் பிடித்து படுத்து தான் பழக்கம். தனியே படுத்ததில்லை. தனிமை என்றால் பயம். யாருடன் படுப்பது?

அவள் தயங்கி நிற்க... சூழ்நிலை புரிந்தவளாய் வித்யா அவள் கைப் பற்றி அழைத்து தன்னருகே படுக்க வைத்துக் கொண்டாள்.

காலை நேர பரபரப்பு... கமலி சத்தம் போட்டபடி சமைத்துக் கொண் டிருப்பது, அப்பா சேரில் அமர்ந்தபடி காபிக்காக அதிகாரம் செய்வது, உடம்பில் நீர்த்திவலைகள் அப்பியிருக்க, இடுப்பில் கட்டிய டவலுடன் ஈரத்தலையை கைகளால் உதறியபடி வேகமாய் நகர்ந்த அண்ணனின் பர பரப்பு, பெயருக்கு எதையோ சாப்பாட்டு '' லஞ்ச் பாக்ஸ் எங்கேம்மா? '' என்று அம்மாவை அவசரப்படுத்தி பேகை மாட்டிக் கொண்டு ஓடிய வித்யா... என் பாடப்புத்தகத்தில் பிடித்த உறவுகள் உருவங்களாக நடமாட 'இது என் குடும்பம்' என்று புதிதாய் அவர்களை ரசித்தாள்.

எப்போதும் சிந்துவிற்கு பாட்டி தான் தலைவாரி பின்னலிடுவாள். சீப்பும் கையுமாக கமலியின் முன் வந்து நின்றாள்.

'' அம்மா ''

'' என்ன? '' கணவருக்கு தோசை வார்த்துக் கொண்டிருந்தவள் கேட் டாள்.

'' நேரமாச்சு ஸ்கூலுக்குப் போகணும் ''

'' அதுக்கென்ன? ''

'' ஜடை போட்டு விடும்மா ''

'' என்ன பண்ணிட்டிருக்கேன் நான்? அதோ அவர் சாப்பிடறதுக்காக ரெடியா இருக்கார். இதோ தோசை போட்டிட்டிருக்கேன். இப்ப வந்து இதைப் போடு அதைப் போடுன்னுகிட்டு? இத்தனை வயசாகுது. நீயே போட்டுக்க மாட்டியா? ''

'' தீபா அத்தை தான் பின்னிவிடுவாங்க. ''

'' நல்லா வளர்த்திருக்காங்க. வித்யால்லாம் அவளே தான் அவ வேலையெல்லாம் பார்த்துப்பா! நீயும் பழகிக்க இன்னைலேர்ந்தே. ''

அம்மா அப்படி பேசியது கூட வருத்தமில்லை. ஆனால் பக்கத்து வீட்டு பெண்ணிடம் பேசுவது போன்ற தொனிதான் சிந்துவை வருத்தப்படுத்தி யது.

காமாசோமாவென்று கோணல்மானலாய் வகிடெடுத்து பின்ன லிட்டு பள்ளிக்கு சென்ற போது...

முதல் வகுப்பு ஆரம்பித்துவிட்டிருந்து.



''பில்லை''க் கட்டிட்டேன் டாக் டர்''

''சரி இப்ப ''பல்லை''க் காட் டுங்க''

-சிவ.ராமலிங்கம்,
தூத்துக்குடி.



சிந்து... கிரவுண்டில் வெயிலில் முதல் வகுப்பு முடியும் வரை நிற்க வைக்கப்பட்டாள்.

சிந்து தன்னிலை புரிந்து கொண்டாள். அவள் அந்த வீட்டின் வேண் டாத விருந்தாளி.

அம்மாவை எதற்காகவும் அவள் தொந்தரவு செய்வதில்லை. வீட் டிற்கு வந்ததும் பலமுறை பின்னலிட்டு மடித்துக் கட்ட பழகினாள். தன் துணிமணிகளை தானே துவைத்துக் கொண்டாள். மற்றவர்களின் துணி களை கமலி தான் துவைப்பாள்.

சிந்து செய்வதை ஏனோ தடுக்கவில்லை.

தனக்கு வேண்டியதை பசியிருப்பினும் அளவாய் போட்டு சாப்பிட் டாள்.

எதற்காகவும் திட்டுவது தப்பில்லை. ஆனால் அந்நியமாய் திட்டு வதை தான் மனசு ஏற்க மறுத்தது.

ஒருநாளும் அம்மா தன்னிடம் வித்யாவிடம் பேசுவது போன்றோ, சிரிப்பது போன்றோ இல்லாதது வலித்தது.

ஒரு விடுமுறை நாளில் அம்மாவிடம் கேட்டே விட்டாள்.

துணிகளை மொட்டை மாடியில் உலர்த்திக் கொண்டிருந்தாள் கமலி.

'' அம்மா ''

திரும்பியவள் சலனமின்றி '' என்ன'' என்றாள்.

'' அப்பாவுக்கு ஏம்மா என்னைப் பிடிக்கலே? ''

கொடியில் துணியைப போடப்போன கைகள் இறங்கின.

சில கணங்கள் கழித்து, ''தெரியாது '' என்றாள்.

'' அப்ப உனக்கு தெரிஞ்சிருக்கணுமேம்மா என்னை உனக்கு ஏன் பிடிக்கலே?''

இந்த கேள்வியை சத்தியமாய் கமலி எதிர்பார்க்கவில்லை. மகளின் முகத்தை ஏறிட்டாள்.

அழகான வட்ட முகத்தில் அலைபாய்ந்த ஏக்கத்தை காண என்னவோ செய்தது.

தன்னை சுதாரித்துக் கொண்டு மறுபடி உலர்த்த ஆரம்பித்தாள்.

'' ஏம்மா? '' என்றாள் மறுபடி சிந்து.

நிதானமாய் சொன்னாள்.

''இதுக்கு என்கிட்ட பதிலில்லே!''

''....?''

''இதோ பார் இந்த மாதிரியெல்லாம் பேசி என்னை தொந்தரவு பண் ணிட்டிருக்காதே? அவர் காதிலே விழுந்தா ஹாஸ்டல்ல எங்கேயாச்சும் சேர்த்து விட்ருவார். பார்த்து நடந்துக்க! ''

குரலில் இருந்த கடுமை. அவளை மிரள வைத்தது.

அம்மாவின் மேல் புதிதாய் பயம் உண்டானது.

அந்த வீட்டில் வித்யா மட்டுமே அவளிடம் சகஜமாக பழகுகிறாள். பள்ளியில் நடந்த விஷயங்களை அவளிடம் பகிர்ந்து கொள்வாள். சிந்து வின் குரல் அந்த வீட்டில் அப்போது மட்டுமே ஒலிக்கும்.

பாஸ்கர் ஸ்பெஷல் கிளாஸ், நண்பர்கள் வீடு என்று தாமதமாகத் தான் வீடு திரும்புவான். ஆனால் படிப்பில் கெட்டி. அப்பாவிடமும், அம்மா

விடமும் பேசுகிற அளவுக்கு வித்யாவிடம் கூடப் பேசுவதில்லை. அவன் ஒரு டைப். சிந்துவைப் பார்த்தால் சினேகமாய் புன்னகைப்பான். எப்போதாவது 'ஹாய் ஹலோ' அவ்வளவுதான்.

எம்.பி.பி.எஸ்.ஸை வெற்றிகரமாய் முடித்து விட்டு எம்.எஸ். படிக்க ஆசைப்பட்டு அப்பாவின் முன் வந்து நின்ற பாஸ்கரை... பயத்துடன் பார்த்தாள் கமலி.

ஏற்கனவே பூர்வீக சொத்தை விற்று தான் அவனை டாக்டருக்கு படிக்க வைத்தார் விஸ்வநாதன்.

இப்போது...?

அவள் பயந்தபடியே வாக்குறுதி கொடுத்தார் விஸ்வநாதன்.

''படிப்பா எவ்ளோ வேணும்னாலும் படி! காவேரிப்பாக்கம் நிலத்தை வித்துட்டாப் போச்சு!''

திக்கென்றானது கமலிக்கு!

இருப்பதோ அந்த அஞ்சு ஏக்கர் நிலம் மட்டும் தான்! அதை வித்யாவின் திருமணத்திற்கென நம்பியிருந்தாள்.

அதை இவன் படிப்புக்கு விற்று விட்டால்... வித்யாவுக்கு? தனிமையில் கணவனிடம் கேட்டாள்.

7

"என்னை என்ன... அவ்வளவு பொறுப்பில்லாதவன்னா நினைச்சே? பாஸ்கர் எனக்கு ஒரு கண்ணுன்னா... வித்யா எனக்கு இன்னொரு கண். அவ பிறந்தப்பவே அவளுக்கு பிக்ஸட்ல பணம் போட்டுட்டேன். அவ கல்யாணத்தப்ப பத்து லட்சம் கிடைக்கும்!'' என்றார் விஸ்வநாதன், மனைவியைப் பெருமிதமாய் பார்த்தபடி.

''நிஜமாவா சொல்றீங்க?''

''ஆமா கமலி! சஸ்பென்சா இருக்கட்டுமேன்னு சொல்லாம மறைச்சேன்.''

''கேக்க சந்தோஷமாத்தான் இருக்கு. ஆனா பாஸ்கர் படிப்புக்காக நிறைய செலவு பண்ணிட்டோம். படிச்சதுபோதாதா? காவேரிப் பாக்கம் நிலம் வேற எதுக்காவது உபயோகப்படும். இப்ப அதை விக்கணுமா?''

''என்ன பேசறே? பாஸ்கர் நம்ம குலவாரிசு. அவனுக்கு செய்யாம? என் புள்ளை பெரிய டாக்டராகி சம்பாதிச்சு. நாம இழந்ததையெல்லாம் மீட்டுத் தருவான். பார்த்துட்டேயிரு.''

அதற்கு மேலும் விளக்கி சிந்துவையும் கரைசேர்க்கணுமே என்று சொல்ல பயந்து வாயை மூடிக் கொண்டாள் கமலி.

நிலத்தை விற்று மகனை மேற்படிப்பு படிக்க வைத்தார்.

ஆனால் பாஸ்கர் படிப்பு மட்டுமா படித்தான்?

சாமுத்ரிகாவிடம் காதல் பாடத்தையும் தான்!

சாமுத்ரிகா... மதுரையில் ஆளும்கட்சி எம்.எல்.ஏ.வான மாரிமுத்துவின் ஒரே மகள்! அரசியல்வாதிகளுக்கே உரிய இலக்கணத்துடன் நேர்வழி தவிர்த்து. பல வகையிலும் பணம் சம்பாதித்தவர் சாமுத்ரிகாவும் பாஸ்கரும் ஒரே வகுப்பில் படித்தவர்கள்.



மாரிமுத்து மகள் மீது அதித பாசம் கொண்டவர். அதனால் அவள் காதலை எதிர்க்கவில்லை. பையன் டாக்டர் என்பதும் ஒரு காரணம். அவர் போட்ட ஒரே கண்டிஷன் பாஸ்கர் வீட்டோடு மாப்பிள்ளையாக வேண்டும் என்பது தான். பாஸ்கருக்கு மறுப்பில்லை.

ஆனால் படிப்பு முடிந்ததும் காதல், கல்யாணம் என்று வந்து நின்ற செல்ல மகனைப் பார்த்து மனசு ஏமாற்றத்தால் வெம்பியதை விஸ்வநாதன் மறைத்தார். மகனை ஆசீர்வதித்தார். தடபுடலாய் கல்யாணம் நடந்தது.

மாரிமுத்து மகளுக்கும், மருமகனுக்கும் மதுரையில் விலைக்கு வந்த பழைய தனியார் ஹாஸ்பிடலை புதுப்பித்து சீதனமாய் தந்தார்.

தொழிலும் அங்கேயே அமைந்து விட பாஸ்கர் சென்னை வருவதே அரிதானது.

வித்யாவும் கல்லூரி படிப்பை முடித்து விட்டாள். வரன்கள் வாசலேறி கதவைத் தட்டின. கொஞ்ச காலமாவது ஆபீசிற்கு போய் பணிபுரிந்து சம்பாதிக்க ஆசைப்பட்டாள் வித்யா. வீட்டில் மறுக்கவில்லை. அவள் படிப்பிற்கு உடனே வேலை கிடைத்தது. அதுவும் நல்ல சம்பளத்தில்.

அவள் சம்பாத்தியத்தை பெற்றவர்கள் வீட்டிற்கு பயன்படுத்திக் கொள்ள மறுத்து, கட்டாயப்படுத்தி வித்யாவின் வங்கிக் கணக்கில் சேமிக்க வைத்தனர்.

பிளஸ்டூ முடித்திருந்த சிந்துவை அந்த வீட்டில் மேற்கொண்டு படிக்கவைக்க யாரும் நினைக்கவில்லை. தவிரவும் மற்ற இரண்டு பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி கவலைப்பட்டவர்கள் அவளை கணக்கிலேயே சேர்த்துக் கொள்ளாதது உறைத்தது.

சிந்துவிற்கும் தன் எதிர்காலம் குறித்து பயமும், அக்கறையும், ஆசையும் இருந்தது.

பாட்டியைப் போல் தன்னைத் தாங்கி அன்பு செலுத்தும் ஒரு ஆண்மகன் அவளுக்கு கணவனாக வாய்க்க வேண்டும். நான்கைந்து குழந்தைகளைப் பெற்று தனக்கு வாய்க்காத தாய், தந்தை பாசத்தை கொட்டி வளர்க்க வேண்டும் என்ற கனவு அவளுள் ஆழமாய் பதிந்திருந்தது.

ஆனால் தன் ஒவ்வொரு அத்தியாவசிய செலவிற்கும் கூட நாள் கணக்கில் தயங்கி பயந்து வெளிப்படுத்தி ஒரு உணர்ச்சியுமின்றி தரப்படும் பணம் பிச்சை பெறுவதைப் போலிருந்தது.

அதனால் யோசித்து தன் முடிவை அம்மாவிடம் சொன்னாள்.

''நான் ஏதாவது ஒரு சுயதொழில் பண்ணட்டுமாம்மா?''

''என்னவாவது பண்ணிக்க''

''அ... அப்பா ஒண்ணும் சொல்லமாட்டாரே?''

''அப்பாவா? அவர் என்ன சொல்லப் போறார்? அதுவும் உன் விஷயத்தில்? நீ என்ன வேணும்னாலும் பண்ணு.'' என்று உரிமையற்ற வார்த்தைகளால் மனதை கிழித்தாள்.

''சரிம்மா''

பாட்டி வீட்டில் இருந்த போது அவளுக்கு உடல் படுத்தும் போதெல்லாம் சிந்து சமையலில் உதவியதுண்டு. அதே கைப்பக்குவம் அவளிடம் இருந்தது.

மகளிர் சுய உதவிக்குழுவில் சேர்ந்தாள். அங்கு அளித்த பயிற்சியும், அறிவுரைகளும் அவளின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்தது. சுய உதவிக்குழு மூலம் வங்கிக் கடன் பெற்று சமையல் பாத்திரங்களை வாங்கி கிராமத்து சுவை மணக்க, அத்தனை வகை உணவுகளையும் சமைத்து சுய உதவிக்குழு தலைவர் மூலம் கலெக்டர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள உழவர்சந்தையில் அனுமதி பெற்று விற்றாள்.

வியாபாரம் படிப்படியாக உயர்ந்து பிக்கப் ஆனது.

அதில் கிடைத்த வருமானத்தை சேமித்து, அம்மா கையில் தந்த போது கமலி வாங்க மறுத்தாள்.

ஆனால் விஸ்வநாதனோ '' எதுக்கு வேணாங்கிறே? இருக்க இடம் குடுத்து சோறு போடலே? சும்மாவா? வாங்கிக்க '' என்று அதட்டினார்.

சிந்து தன் வருமானத்தை சந்தோஷமாகத்தான் கொடுத்தாள். ஆனால் அதைப் பெற்றுக் கொண்ட காரணம் அவளை இன்னும் அந்நியப்படுத்தியது.

சிந்து தன் வருத்தங்களை குழிதோண்டி உள்ளத்தில் புதைத்துக் கொண்டாளொழிய முகத்தில் படர விட்டதில்லை.

ஆரம்பத்தில் வீட்டிலேயே அவள் ஒருத்தியாகவே சமைத்தாள்.

''இதென்ன சமையல்கட்டை கசகசன்னு ஆக்கறே? வீட்டு மளிகை சாமான்ல கைய வைக்கிறியா என்ன? '' கமலி முகம் சுளித்தாள்.

''ஐய்யய்யோ மளிகை சாமான் எதையும் எடுக்கலைம்மா. நான் தான் தினமும் மணி அண்ணாச்சி கடையில வாங்கிடறேனே? ''

'' கொல்லைப்புறத்துல சமைக்கக் கூடாதா? ''

சிந்து தயவாய் அம்மாவை ஏறிட்டாள்.

''இப்ப தாம்மா கஸ்டமர்ங்க அதிகமாக வர ஆரம்பிச்சிருக்காங்க. கலெக்டர் ஆபீஸ்ல வேலை செய்யறவங்க நிறைய பேர் சாப்பிட வர்றாங்க. பலகாரம் சுவையா இருந்தா மட்டும் போதாது. சமைக்கிற இடம் சுத்தமா இருக்கணும்னு எதிர்பார்ப்பாங்க. ''

'' அதுக்கு என் வீட்டு சமையல்கட்டு தான் கிடைச்சுதா? ''

'' சுத்தம் பண்ணிடறேன்மா. ''

இப்படி தினம் தினம் அந்த வீட்டில் அல்லாடி எதுவும் கிடைக்காவிட்டாலும் என்றாவது ஒருநாள் பாசமாய் ஒருவார்த்தை பேசிடமாட்டார்களா என்ன? என்று காத்திருந்தாள் சிந்து.

வித்யா பழையவைகளிலிருந்து மீண்டு தங்கையை பார்த்தாள்.

சலனமற்ற முகம். பாதி மலர்ந்த அல்லி மலரைப் போன்ற அழகு.

எவ்வளவு அன்பு என் மீது? நானும் சென்று விட்டால் இந்த வீட்டில் இவளிடம் பேசக்கூட ஓர் ஆள் இல்லை.

நிஜம் சுட்டது.

## 8

"அடடே வாங்க... வாங்க தம்பி! ''

காரிலிருந்து நண்பனுடன் இறங்கிய தேவாவை பஞ்சாயத்து தலைவர் பாசமாய் வரவேற்றார்.

'' பாஞ்சாலி இங்கே வா யார் வந்திருக்காங்கன்னு பாரேன் உக்காருப்பா... தம்பி, நீயும் உக்காரு... ''

தேவாவும், திவாகரும் சோபாவில் அமர்ந்தனர். உள்ளிருந்து வந்த பாஞ்சாலி அவர்களை வியப்பும், மகிழ்ச்சியுமாய் பார்த்தாள்.

''அட தேவா தம்பி உங்க பேரு திவாகர் தானே? ''

'' சரியா சொல்லிட்டீங்க ஆன்ட்டி! பரவாயில்லையே என் பேரைக் கூட சரியா ஞாபகம் வச்சு சொல்லிட்டீங்க? ''

'' போன வாரம் தானே வந்து போனீங்க. எதுக்கு ஆன்ட்டி, கீன்ட்டின்னு நான் அம்புட்டுப் படிக்காதவ. அக்கான்னு கூப்பிடு. இல்லே அத்தைன்னு கூப்பிடு. என்ன சாப்பிடறீங்க? ''

'' சாப்பிடறீகளான்னு கேக்கறது என்ன நாகரீகம்? சாப்பிடக் கொண்டு வா. '' பஞ்சாயத்து தலைவர் விரட்ட...

பாஞ்சாலி தலையாட்டியபடி உள்ளே செல்ல...

''அக்கா ஒண்ணும் வேணாம். தண்ணி மட்டும் போதும் அக்கா. கேட்டது தானே சரி! நாங்க வரும்போதே காமாட்சி ஹோட்டல்ல சாப்பிட்டு தான் வந்தோம். '' என்றான் தேவா.

'' என்ன தம்பி அந்த ருசி உங்களையே சுத்தி வருதா? '' பலமாய் சிரித்தார் பஞ்சாயத்து.

''அதையேன் கேக்கறீங்க சார் ஊரை விட்டு கிளம்பும் போதே சாப்பாட்டு ஞாபகம் தான். ''

தேவா மென்மையாக புன்னகைத்தான்.

'' இவன் அதிகமாப் பேசறான். அப்படியில்லே சார்! நம்ம வாழ்க்கையில நம்மளைக் கடந்து போகிற நல்ல விஷயங்களை மறக்க முடியாதுல்லியா? அதுப்போல தான் இதுவும். அப்புறம் அப்பா போன் பண்ணினாரா சார்? ''

''நேத்தே பண்ணிட்டார். விபரமும் சொன்னார். படம் எடுக்க நான் அனுமதி குடுத்தாலே போதும். நீங்க ரெண்டு பேரும் எங்க வீட்டுலேயே தங்கலாமே. எதுக்கு கெஸ்ட் ஹவுஸ்ல? அதுவும் காட்டுக்கு கிட்டக்கயே இருக்கு. ''

'' இல்ல சார் டிஸ்கஷன் அதுஇதுன்னு லேட் நைட் தூங்குவோம். நைட்டெல்லாம் லைட் போட்டுக்கிட்டு, பேசிக்கிட்டு, கண்டிப்பா டிஸ்டர்ப்பா இருக்கும். எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. ''

'' இந்தாங்க எடுத்துக்குங்க. ''

பாஞ்சாலி நீட்டிய தட்டில் தண்ணீரும், சுடச்சுட இஞ்சி டீயும் இருந்தது.

''தாங்க்ஸ்க்கா '' திவாகர் பாசமழை பொழிந்தான்.

யூனிட் ஆட்கள் வந்திறங்க... தேவா பரபரத்தான்.

'' என்ன திவா... ஸ்ருதி இன்னும் வரலை? அதான் எனக்கும் புரியலை. அட்வான்ஸ் வாங்கறப்பவே ஊர் அட்ரஸ், தேதி எல்லாம் விபரமாய் விளக்கி சொல்லி எழுதிக் குடுத்திட்டு தான் வந்தேன். ''

'' போனைப்போடு. ''

திவாகர் செல்போனில் நம்பரைப் போட்டான்.

ரிங் போனது எடுக்கவில்லை.

திரும்பத் திரும்ப முயற்சித்தும் ' எடுப்பேனா பார்' என்று அலறியது

எதிர்முனை.

டென்ஷனான தேவா யூனிட் ஆள் ஒருவரிடமிருந்து போனை வாங்கி ஸ்ருதி நம்பரைப் போட்டான்.

உடனே அட்டென்ட் பண்ணினாள் ஸ்ருதி.

'' ஹலோ ஸ்ருதி ஹியர் ''

'' மேடம் நான் தேவா! ''

'' ஓ... '' சங்கடமாய் வந்தது வார்த்தை.

'' என்ன மேடம் இது? ஏன் எங்க கால் அட்டென்ட் பண்ண மாட்டேங்கறீங்க?''

'' அதெல்லாமில்ல நான் போனை வச்சுட்டு பால்கனிலே ''

'' எப்ப வர்றீங்க, உங்களுக்காக எல்லாரும் வெய்ட்டிங் '' என்றான் இடைமறித்து.

'' இல்ல தேவா சார் அம்மா இதை வேணாங்கறாங்க. அட்வான்ஸ திருப்பிக் குடுத்துடறேன். ''

'' வாட் ''

'' குழந்தைக்கு பால் குடுக்கிற மாதிரி விளம்பரப் படத்துல நடிச்சா என் இமேஜ் போய்டும். சான்ஸ் போய்டும். கடைசியில சீரியல்ல நடிக்கக் கூட சான்ஸ் வராதுன்னு பீல் பண்றாங்க. ''

'' ஏங்க இது எவ்ளோ மரியாதைக்குரிய விஷயம்? ஒரு பெண், குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கிற மாதிரி நடிக்கிறது புண்ணியம்ங்க.''

''ஸாரி தேவா. எனக்கு புண்ணியம் மட்டுமே போதாது. கல்லா கட்டணும். அக்ரிமெண்ட் தான் போடலியே... ஆளை அனுப்பி அட்வான்ஸை வாங்கிக்குங்க!'' திமிராய் பேசி கட் பண்ணினாள்.

தேவா சோர்ந்துப் போனான்.

பஞ்சாயத்துத் தலைவர் அவனையே வருத்தத்துடன் பார்த்தார்.

''இப்படியாகிப் போச்சே தம்பி.. இப்ப என்ன பண்ணப் போறீங்க?''

''புரியல சார்.. ஷூட்டிங் கேன்சலானா... ஒரு நாளைக்கு எவ்ளோ நஷ்டமாகும்னு அந்தப் பொண்ணுக்கும் தெரியும். இன்னும் ரெண்டு நாளைக்குள்ள ஷூட்டிங் முடிச்சாகணும். எனக்கு பணம் நஷ்டமாகறதைப் பத்திக்கூட கவலையில்லே. ஒத்துக்கிட்ட வேலையை முடிச்சுக் குடுக்கறது தான் கலைஞனுக்கு அழகு!''

''வேற நடிகைய கேட்டுப்பாருங்க!''

''முயற்சிப் பண்ணிட்டு தான் இருக்கேன். விதவிதமா பட்டுப்புடவையும், நகையும் மாட்டிக்கிட்டு விளம்பரப் படத்துல நடிக்கறதுக்குன்னா.. யோசிக்காம சரின்னுடு வாங்க.. ஒரு சமூக நோக்கோட இதை ஒத்துக்க மாட்டேங்கிறாங்க சார்!''

''ஏம்ப்பா... தெரியாம தான் கேக்கறேன். ஒரு நடிகை குழந்தைக்கு பால் குடுக்கற மாதிரி நடிச்சா தான் மக்கள் மனசுல பதியுமா என்ன? சாதாரணப் பொண்ணுங்க நடிச்சா என்ன?''

பஞ்சாயத்து அப்படிக் கேட்டதும் வாயைப் பிளந்தான் தேவா.

''எக்ஸலண்ட் சார்.. ஆனா, அப்படி யாரும்.. அதுவும் சாதாரணப் பொண்ணுங்க...''

''இல்ல தேவா. சார் சொல்றது தான் சரி! ஒரு நடிகைய அந்த இடத்துல காண்பிச்சா... கவர்ச்சிக் கண்ணோட தான் பார்ப்பாங்க. சாதாரண பொண்ணுதான் உணர்வு ரீதியா ரீச் ஆகும். ஆனா, அவங்கள்லாம் அவ்ளோ தைரியமா நடிச்சிட மாட்டாங்க. அந்தப் பொண்ணோட முகத்தை சில் அவுட்ல காட்டிடலாம்.'' என்றான் திவாகர்.



''வெரிகுட் ஐடியா.. ஆனா யார்கிட்டேப் போய்...''

''கவலைப்படாதே தம்பி.. இன்னைக்கு பஞ்சாயத்து ஆபீஸ்ல மகளிர் சுய உதவிக்குழு மீட்டிங் இருக்கு. அங்கே கேட்டுப் பார்க்கலாம். ஆனா, ஒரு கண்டிஷன் யார் நடிக்க முன் வந்தாலும், அவங்க பேரு வெளிய தெரியக்கூடாது.. முகமும் தெரியக்கூடாது. குடும்பத்துல பிரச்சனை வந்துடக்கூடாது.''

''சத்தியமா... சார்!''

## ௯

தேவாவும், திவாகரும் அவர்கள் அறையில் கவலை தோய்ந்த முகங்களுடன் அமர்ந்திருக்கின்றனர்.

''சே... இன்னும் பத்து நாள்ல தாய்ப்பால் வாரம் கொண்டாடப்போறாங்க. அதுக்குள்ளே என்னால இதை முடிச்சுக்குடுக்க முடியுமா திவா?''

''புரியலேடா.. அந்த மகளிர் சுய உதவிக்குழுவுல.. நாம இப்படின்னு கேட்டதும் கல்லெறியாத குறையா பொம்பளைங்க திட்டினாங்க. பஞ்சாயத்து பேச்சை... அந்தளவு நம்பியிருக்க வேண்டாமோன்னுத் தோணுது!''

''அவர் என்னடாப் பண்ணுவார்? அவருக்குத் தெரிஞ்ச அளவுக்கு நமக்கு ஹெல்ப் பண்ணினார்.''

அந்த நேரத்தில்.. காலிங்பெல் சிணுங்கியது.

இருவரும்... கழற்றிப் போட்டிருந்த சட்டையை எடுத்து அணிந்தனர்.

''யாருடா...?''

''பஞ்சாயத்தா இருக்கும்.. கதவைத்திற..!''

தேவா கதவைத் திறக்க...

வாசலில் நின்றிருந்த பெண்ணைப் பார்த்து ஆச்சர்யமானான்.

'இவள்.. இவள்.. அந்த காமாட்சி ஓட்டலில்..'

''வணக்கம் சார்!'' என்ற அவளின் குரல் மேற்கொண்டு யோசிக்க விடாமல் தடுத்தது.

''வா.. வாங்க...''

உள்ளே வந்து அமர்ந்தாள்.

''சார்.. என் பேர் சிந்து! நேத்து நீங்க மகளிர் சுய உதவிக்குழுவுல பேசினதைக் கேட்டேன்.. அதான் வந்தேன்!''

தேவாவும், திவாகரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''எனக்கு அதுல நடிக்க விருப்பம்!''

''.........?''

''ஆனா, இது எங்க வீட்டுக்குக்கூட தெரியக்கூடாது.''

''கண்டிப்பாங்க.. ரொம்ப தாங்க்ஸ்ங்க..'' தேவா நெகிழ்ந்துப் போனான்.

''எப்ப ஷுட்டிங்.. எவ்வளவுநேரத்துல முடிச்சிடுவீங்க?''

''நாளைக்கு பதினொரு மணிக்கு.. இங்கேயே ஷுட்டிங்.. அரைமணிநேரம் போதும் நீங்கன்னு.. யார் பார்த்தாலும் தெரியாது...''

''உங்களை நம்பறேன்.. வர்றேன்!''

சென்று விட்டாள்.

''தேவா.. என்னடாயிது ஆச்சர்யமாயிருக்கு! அங்கே இருந்த சப்ளை பிகரெல்லாம் கண்டமேனிக்கு திட்டிச்சுங்க... ஆனா, இப்படி ஒரு அழகானப் பொண்ணு தேடி வந்து சம்மதிச்சிட்டுப் போகுது. பஞ்சாயத்து... பஞ்சாயத்து தான். ஆமா, இந்தப் பொண்ணை எங்கேயோ பார்த்திருக்கேனே...?''

''நானும் தான்!'' என்றான் இன்னமும் பிரம்மிப்பு அகலாமல்!

மறுநாள்.. ஆர்ப்பாட்டமின்றி ஒரு சிலரை மட்டுமே துணைக்கு வைத்துக் கொண்டு சிந்துவை ஷுட் பண்ணினான். அதிசயமாய் வாடகைக் குழந்தையும் ஒத்துழைத்தது.

ஷுட்டிங் முடிந்ததும். அவளிடம் ஒரு கவரை நீட்டினான் தேவா.

சிந்து புருவம் முடிச்சுப்போட அவனை பார்த்தாள்.

''என்னது?''

''நீங்க நடிச்சதுக்காக சின்ன அன்பளிப்பு!''

''ஸாரிங்க. நான் பணத்துக்காக போஸ் குடுக்க வரலை, தாய்ப்பாலோட சுவை என்னன்னேத் தெரியாம வளர்ந்தவ நான்! அதனோட அருமை கிடைக்காத எனக்குத்தான்! அதோட மதிப்பு ரொம்பவேத் தெரியும். ஒரு திருப்திக்காக தான் இங்கே வந்தேன். வர்றேங்க...''

நடந்தாள்.

''ஒரு நிமிஷம்ங்க!'' தேவா அழைத்தான்.

''...?!''

''என்னோட இத்தனை வருஷ கேரியர்ல உங்களை மாதிரி யாரையும் நான் சந்திச்சதில்லை. இங்கே எல்லாமே பணம் தான்! பணத்துக்காக தான் எல்லாமே! இப்ப நீங்க சொன்ன வார்த்தை.. ஏன் எதுக்காகன்னு தெரியலே. ஆனா, ஆத்ம திருப்திக்காக.. சினிமாவை சார்ந்திராத பொண்ணு, இப்படிப்பட்ட சீன்ல நடிக்கறது சாதாரண விஷயமில்லை மேடம்! உங்களை மனசார பாராட்டணும்னு தோணுது. நன்றிங்க!''

சிந்து இதழ் பிரியாமல் புன்னகைத்து அவன் பாராட்டை ஏற்றுக் கொண்டாள்.

''என் பேரு தேவா! டாக்குமெண்



''வாளிப்பான உடம்புக்கு சொந்தக் காரனாக இருக்கியே... அதன் ரகசியம் என்ன?''

''தினம் நூறு ''வாளி'' நீர் சேந்தி தோட்டத்துக்கு இறைக்கிறேன் அதான்''.

-சிவ.ராமலிங்கம்,
தூத்துக்குடி.



டரி விளம்பரப்படம். குறும்படம்னு எடுக்கிறேன். சினிமாப்படம் எடுக்கணும்னு ஆசையில்லே. சர்வதேச திரைப்படத்துல என் குறும்படம் பரிசு வாங்கணும். அது என் ஆசை. மத்தபடி எங்க குடும்பத் தொழில் செய்துட்டிருக்கேன்.''

''நல்லது!''

''இது என் விசிட்டிங் கார்டு''

அவன் தந்ததை வாங்கிக் கொண்டாள்.

''டி.வி.யில வர்ற ஹார்லிக்ஸ், மிக்ஸி, இன்சூரன்ஸ்... இதெல்லாம் நான் எடுத்த விளம்பரப் படங்கள் தான்!'' என்று ஒரு பெரிய பட்டியலையேச் சொன்னான்.

சிந்து தலையாட்டிப் புறப்பட்டாள்.

அவள் சென்ற பின் திவாகர் அவனை வாட்டி எடுத்து விட்டான்.

''என்ன மச்சான். அவகிட்ட ஓவரா சீன் போடறே?''

''நான் எங்கடா சீன் போட்டேன்? உண்மையை தானே சொன்னேன்?''

''அவ கிட்டே உன்னோட ரெஸ்யூம் சொல்ல வேண்டிய அவசியமென்ன? எத்தனையோ நடிகைகளோட நாம வேலை பார்த்திருக்கோம். வேலையத் தவிர, அதிகபட்சமா நீ யார்கிட்டயும் ஒரு வார்த்தை கூட பேசினதில்லையே!''

''ரொம்ப ஆராய்ச்சிப் பண்ணாதே! ஆகற வேலையப் பாரு!'' உதடுக்குள் சிரிப்பை மென்று அதட்டலாய் சொன்னான் தேவா.

''ம்ஹூம்.. உன் முகமே ஒரு மாதிரி பூவா மாறிப் போயிருக்குடா...'' திவாவும் விடவில்லை.

''அடிங்..'' சோபாவில் அவனைத் தள்ளி அவன் மேல் அமர்ந்து வலிக்காமல் குத்தினான்.

பஞ்சாயத்து அவனை ஆச்சர்யமாய் பார்த்தார்.

''என்ன தம்பி.. திடீர்னு அந்தப் பொண்ணைப் பத்தி விசாரிக்கிறே?''

''சாருக்கு அந்த ஓட்டல் சாப்பாடு ரொம்ப பிடிச்சுப் போச்சாம்.. அதான் அந்த ஓட்டலையே விலைக்கு வாங்கிடலாம்னு...''

''ப்ச் திவா.. சும்மாயிரு! இல்லே சார். உங்க கிட்ட சொல்றதுக்கென்ன? வீட்ல பொண்ணு பார்த்துட்டு இருக்காங்க. இந்தப் பொண்ணு என் மனசுக்கு நிறைவா இருக்காங்க...''

''சரிப்பா.. இவங்க உங்க ஆளு இல்லையே! உங்கப்பா...''

''அவரை என்னால வழிக்கு கொண்டு வர முடியும். இந்தப் பொண்ணு வீட்ல எல்லாம் சரியா நடந்தா...''

''அங்க தானே இடிக்குது!?''

10

பஞ்சாயத்து விஸ்வநாதனைப் பற்றியும், சிந்துவின் மீது அவர் வைத்திருந்த அபரிமிதமான வெறுப்பைப் பற்றியும், அவள் பாட்டியிடம் வளர்ந்தது. இறந்த பின் பெற்றோரிடமே மூன்றாம் மனுஷி போல் வந்து சேர்ந்தது, சுயமாய் டிபன் சென்டர் வைத்து முன்னேறு

வது என்று அத்தனையும், சொல்ல, சொல்ல.. தேவாவுக்கு நெஞ்சம் கனத்தது. அது சிந்துவிற்கு ஏற்பட்ட துன்பத்தினால் மட்டுமல்ல.. இன்னும் அவள் மீது கூடிய நேசத்தின் சுமையினாலும் தான்.

''இதுக்கு மேலேயும் அந்தப் பொண்ணு மேல ஆசை வருமா தம்பி?''

''இது ஆசை இல்லைங்க சிந்து கையில என் வாழ்க்கையை முழுசா ஒப்படைக்கணும்ங்கிற நேசம். இந்த வயசுல இவ்வளவு பொறுப்பா, இருக்கிற பொண்ணுங்க கம்மி சார். நான் அவங்கப்பாவை பார்க்க ஏற்பாடு பண்ண முடியுமா?''

''இந்த விஷயத்திலே உறுதியா இருக்கே! சரி.. நீ எப்ப ஊருக்குப் போறே?''

''சின்ன சின்ன வேலை பாக்கியிருக்கு. மூணு நாள் ஆகும்.!''

''அப்ப... நாளைக்கு பார்த்துடலாம்!''

தேவாவின் அடர்த்தியான அளவான மீசையினுள் ஒளிந்திருந்த சதைப்பிடிப்பான உதடுகள் சந்தோஷத்தில் விரிந்தது.

பஞ்சாயத்து நிதானமாய் சொல்லி கொண்டிருக்க விஸ்வநாதனின் விழிகள், எதிரே அமர்ந்திருந்த தேவாவை அளந்துக் கொண்டிருந்தது.

சமையலறை கதவிற்கு பின்னால் நின்றிருந்த கமலி ஹாலில் நடப்பவை அத்தனையும் பதற்றத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''சும்மா சொல்லக்கூடாது. தேவா மாதிரி ஒரு பையன் கிடைக்கறது கஷ்டம். அவங்கப்பா பெரிய..''

''போதுமய்யா!'' என்று கைநீட்டி தடுத்தார் விஸ்வநாதன்.

''எனக்கு இதிலே இஷ்டமில்லே. போய்ட்டு வர்றீங்களா?'' முகத்தில் அடிப்பது போல் பட்டென சொன்னார்.

''அவசரப்பட்டு முடிவு..''

''என்னை மேற்கொண்டு எதையும் பேசவச்சிடாதீங்கய்யா! நான் ஒண்ணும் விபச்சாரம் பண்ணலே! ஒரு மொட்டைப் பையனை கூட்டிட்டு வந்து.. இவன் விரும்பிட்டான் பொண்ணைக் குடுங்கன்னு ஒரு பஞ்சாயத்து தலைவர் மாதிரியாப் பேசறீங்க? அசிங்கமா இருக்குங்க... புறப்படுங்க!''

வார்த்தையில் ஒளிந்திருந்த மோசமான வார்த்தையில் ஆடிப்போன பஞ்சாயத்து சட்டென எழுந்து கொள்ள தேவா விதிர் விதிர்த்து அவருடன் வெளியேறினான்.

என்ன நடக்கிறது என்பதை உணர்ந்துக் கொள்ளவே வெகுநேரம் தேவைப்பட்ட சிந்துவுக்கு... அப்பாவின் அரக்கத்தனமான வார்த்தைகளால் இடிந்துப் போயிருந்தாள். உள்ளறையில் கம்பில் கல்பொறுக்கிக் கொண்டிருந்தவளுக்கு அடுத்து என்ன நடக்குமோ என்ற பயத்தில் காய்ச்சலே வந்து விட்டது. நினைத்ததுப் போலவே வெடித்தார் விஸ்வநாதன்.

''பார்த்தியா கமலி? என்ன நடந்ததுன்னு பார்த்துக்கிட்டுதானே இருந்தே? சனியனை வீட்டுக்குள்ளே சேர்க்காதேன்னு சொன்னேன். கேட்டியா? அடுத்தமாசம் நம்ம பொண்ணுக்கு கல்யாணம். இந்த நேரத்துல.. எவனோ ஊர் பேர் தெரியாத சினிமாக்காரன் வீடு தேடி வந்து தைரியமா இவளை கட்டிக்கறேன்றான். யார் குடுத்த தைரியம்? அவ கடை போட்டு பலகாரம் மட்டும் தான் விக்கிறாளாமா... இல்லே...''





அப்பாவின் ஆசிட் வார்த்தையில் உள்ளம் வெந்து துடித்துப்போனாள் சிந்து. கண்களில் கண்ணீர் நிற்காமல் சுரந்தது.

''நீங்க டென்ஷனாகாதீங்க... அவகிட்டே நான் பேசிக்கறேன்.''

''சொல்லி வை! இந்த வீட்ல இருக்கணும்னா.. அடக்கம் வேணும். ஆம்பளை வேணும்னா ஓடச் சொல்லு. விஸ்வநாதன் மானஸ்தன். பொலி போட்ருவேன்.. கல்யாணம், கருமாதின்னு இனி எவனும் என் வீட்டு வாசப்படி ஏறி வரக்கூடாது.''

''சொல்றேங்க.. மூச்சு வாங்குது பாருங்க... நான் பேசிக்கறேன்.. ஏய் சனியனே எங்கேயிருக்கே?'' உள்ளே கோபமாய் கத்திக் கொண்டே வந்த கமலி.. சிந்துவின் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள்.

''திமிராடி உனக்கு? அசிங்கப்படுத்தறியே! நான் வளர்த்தப் பொண்ணு... வித்யா எப்படியிருக்கா? உனக்கு ஏன்டி இந்த கூறுகெட்ட புத்தி? காதல் கேக்குதா? அவ்ளோ அலைபாயுதா மனசு.. ச்சீ...''

சிந்து கதறிக் கொண்டே அம்மாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

''அம்மா.. அம்மா.. பிளீஸ்ம்மா... நீயாவது என்னை நம்பு! இப்ப வந்தவங்களுக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவனா டிபன் சென்டர்ல சாப்பிட வந்தப்ப... ஒண்ணு ரெண்டு முறை பார்த்ததா ஞாபகம். மத்தபடி எனக்கு எதுவும் தெரியாதும்மா! அந்த மாதிரி எண்ணம் எனக்கு வராதும்மா. இது... அவங்களா இஷ்டப்பட்டு வந்திருக்காங்க போல... இதுக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்?''

''அதெப்படி உன் விருப்பம் இல்லாம...''

''பாட்டி மேல சத்தியம்மா! என் மனசுல எந்த எண்ணமும் இல்ல..''

கமலி அந்த வார்த்தையில் கொஞ்சம் சமாதானமானாள்.

''சரி..சரி.. இனி இந்த மாதிரி எல்லாம் நடக்காம பார்த்துக்க...''

''ம்..''

தேவா... அவன் அறைவாசலில் வந்து நிற்கும் சிந்துவை எதிர்பார்க்கவில்லை.

''வா.. வாங்க.. உள்ளே வாங்க!''

உள்ளே வந்தவள், ''எனக்கு உள்ளே வரப்பிடிக்கலே.. ஆனா, வெளியே நின்னுப்பேசற விஷயமும் இல்லே... எதுக்காகங்க.. ஏன் இப்படி நடந்துக்கிட்டீங்க?''

''மன்னிச்சிடுங்க சிந்து! உங்க குணம், தன்னம்பிக்கை எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. 'உங்களை நேசிக்கறேன்னு சொல்லி உங்களை சங்கடப்படுத்தாம.. பெரியவீங்களோட சம்மதத்தோட.. எல்லாமே நடக்கணும்னு ஆசைப்பட்டேன்!''

''அதை என்கிட்டயே கேட்டிருக்கலாமே சார்! மறுத்திருப்பேனே! அப்பா உங்களை ரொம்ப மோசமா பேசிட்டார். அவருக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கறேன். ஒரு நல்ல நோக்கத்தோட பிலிம் பண்றீங்க. பாராட்டறேன். மத்தபடி என் மனசுல எதுவுமே இல்லை. நான் உங்க மனசுல இடம் பெறுறதை விடவும், என்னை பெத்தவங்க மனசுல இடம் பிடிக்கணும்னு தவமாயிருக்கேன். கலைச்சிராதீங்க!'' என்று கை கூப்பினாள்.

சிலையாகிப்போனான் தேவா.



## 11

திருமண வேலைகள் தடபுடலாய் நடந்தன. தன்னால் செய்ய முடிந்த அத்தனை வேலைகளையும் சிந்து செய்தாள். வித்யாவின் திருமண பட்டுப்புடவை எடுக்க மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் சென்றனர். சிந்துவை யாரும் அழைக்கவில்லை. வித்யாவிற்கு அழைக்க ஆசையிருந்தும்.. தடையுத்தரவு அவள் வாயை கட்டிப்போட்டது.

திருமண அழைப்பிதழ்கள் அத்தனைக்கும் மஞ்சள் தடவி கவரில் போட்டு அடுக்கி வைத்தாள்.

திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருக்க.. மெகந்திப் போட பியூட்டி பார்லர் செல்ல முயன்றவளை தடுத்தாள் சிந்து.

''நான் உனக்கு மெகந்தி போட்டு விடறேன்க்கா!''

''நீயா.. வேணாம் சிந்து! இந்த நேரத்துல என் கைய வச்சு விளையாடாதே! சரியா வரலேன்னா... அழிக்க முடியாது!''

''தைரியமா கையக்குடுக்கா! இதையெல்லாம் சின்ன வயசுலேயே கத்துக்கிட்டேன். அத்தைக்கெல்லாம் நான் தான் போட்டு விடுவேன் தெரியுமா?'' என்று இழுத்து அமர்த்தி.. அழகாய், நுணுக்கமாய் மருதாணியில் வரைய ஆரம்பித்தாள்.

அவள் வரைய வரைய பிரம்மித்துப் போனாள் வித்யா. அத்தனை அற்புதமாய் இருந்தது. அவளின் பளிச் சென்ற நிறத்திற்கு உள்ளங்கையிலிருந்து, முழங்கைவரை... அழகோவியமாய் ஜொலித்தது.

அன்றிரவு.. முகத்தில் தவிப்புடன் வித்யாவின் முன் வந்து அமர்ந்தாள்.

உறங்க முற்பட்டவள் இவளைப் பார்த்து புன்னகைத்தாள்.

''என்ன சிந்து?''

''நாளைக்கு நாம மண்டபத்துல இருப்போமில்ல?''

''ஆமாம்!''

''உன்னை சுத்தி.. சொந்தக்காரங்க கூட்டம் தான் இருக்கும்.''

''அதுக்கென்ன?''

''நாளைக்குக் கூட உன்கிட்ட பேச முடியாதுக்கா! விடிய விடிய.. இன்னைக்கு என்கிட்ட பேசுவியாக்கா? அதுக்கப்புறம் என் கூட பேச இங்கே யாருமே இல்லே! எதையாவது... மனசுல தோணறதெல்லாம் பேசு. பிளீஸ்க்கா...!''

அவள் கெஞ்சலின் பின்னிருந்த நிஜம் வித்யாவைச்சுட்டது. வாத்சல்யத்துடன் அவள் தலையை கோதிவிட்டாள்.

''கெஞ்சற விஷயமா இது? எனக்கும் தான் உன்கூட விடிய விடிய பேசணும்போல இருந்துச்சு! நீ டயர்டா இருக்கியேன்னு தான் சும்மா இருந்தேன். இப்படி என் பக்கத்துல படுத்துக்க. எனக்கு பத்து வயசு இருக்கும் போது..'' பேச ஆரம்பித்தாள் வித்யா.

நீண்ட நெடிய பேச்சில்.. இரு பெண்களுமே எப்போது உறங்கினார்கள் என்பது அவர்களுக்கேத் தெரியாது.

திருமணம் தடபுடலாய் நடந்து முடிந்தது. மாப்பிள்ளை வீட்டார். நாக

ரீகமான, நல்ல மனமுள்ளவர்களாக இருந்ததால்.. செலவுகளில் பாதியை ஏற்று தாராளமாய் செலவு செய்திருந்தனர்.

பாஸ்கரும், சாமுத்ரிகாவும் முன்னின்று திருமணத்தை நடத்த.. விஸ்வநாதன் பூரித்துப் போனார்.

திருமணத்தையொட்டி அடுத்தடுத்து நடக்க வேண்டிய சாஸ்திர சம்பிரதாயங்கள் நடந்து முடிந்தன. மறுவீடு, தாலிபிரித்து கோர்த்தல் எல்லாம் முடிந்து வித்யா புகுந்த வீட்டிற்கு நிரந்தரமாய் சென்றடைந்த போது தான்... சிந்து.. பாலைவன வெப்பத்தை விடவும் கடுமையான தனிமையை உணர்ந்தாள்.

அப்பாவும், அம்மாவும் வித்யாவை நினைத்து ஏதோ பேசியபடி கண் கலங்குவதைக் கண்டு வித்யாமேல் சற்று பொறாமைக்கூட எட்டிபார்த்தது.

'இதே மாதிரி என்னையும் மணமுடித்து புகுந்த வீட்டிற்கு அனுப்பி எனக்காக கண்ணீர் சிந்துவார்களா?' ஏக்கத்தில் உள்ளம் வெம்பின.

கமலி சோர்ந்த முகத்துடன் நடமாடுவதைக் கண்டு சிந்து மெனக்கெட்டு கோலம் வரைய கற்றுக் கொண்டு அம்மாவிற்கு முன்பாக எழுந்து வாசல் பெருக்கி கோலம் போட்டாள்.

தூக்கக் கலக்கத்துடன் எழுந்து வந்த அம்மாவிடம் ''இனி, இந்த வேலை எல்லாம் நானே பார்த்துக்கறேன்ம்மா? நீ போய் தூங்கு!'' என்றவளை விநோதமாய் பார்த்தாள் கமலி.

''பாத்திரமெல்லாம் நானே தேய்ச்சிடறேன். பால் காய்ச்சி வச்சிடறேன். நீ வந்து அப்பாவுக்கு என்னப் போட்டுத் தரணுமோ அதைப்போடு. அக்காவைப் பிரிஞ்சதிலேர்ந்து உன் முகமே சரியில்லே.. உடம்புக்கு முடியலியாம்மா?''

''அதென்ன அபசகுனமா.. அக்காவைப் பிரிஞ்சதிலேர்ந்துன்னு சொல்றே? அவ வாழ்றதுக்கு புகுந்த வீட்டுக்குப் போயிருக்கான்னு சொல்லு! எல்லாமே அரைச் சொல்லாவே சொல்லிட்டிருக்கே.. அரை குறை வாயிலே பின்ன எப்படி.. ''கடுகடுப்புடன்... அவளைத்தாண்டி சமையல் கட்டினுள் சென்றாள். அம்மா தன்னை எல்லாவற்றிலும் தனிமைப்படுத்துவதை அவளாய் ஜீரணிக்க முடியவில்லை. பின்னேயேச் சென்றாள்.

''தலைவருக்கு டாக்டர் பட்டம் குடுத்தது தப்பாப் போச்சு!''
''ஏன்?''
''எப்பவும் சட்டைப் பையில சிரிஞ்சோட அலையுறாரு!''
-ப.கோபி பச்சமுத்து,
கிருஷ்ணகிரி.





''நான் தான் இதையெல்லாம் பார்த்துக்கறேன்னு சொன்னேனம்மா.. நீ போய்...''

''இதென்ன பெரிய கம்பசூத்திரமா? வித்யா இருந்த வரைக்கும் ஆபீஸ்க்கு எடுத்துப்போக அதையும் சேர்த்து சமைப்பேன். அந்த வேலையும் இல்ல. என் வீட்டுக்காரருக்கு சமைக்கறது எனக்கு பெரிய கஷ்டமா என்ன? நீ உன் வேலையப் போய் பாரு!''

பருப்பை ஊறப்போட்டு, பாலை அடுப்பில் வைத்தாள் கமலி.

''ஏம்மா.. எப்பப் பார்த்தாலும் கோவமாவேப் பேசறே?'' என்றபடி அம்மாவின் பின்னால் நின்று கழுத்தை கரங்களால் வளைத்து, முகத்தைப் புதைத்து அவள் வாசனையை நுகர வேண்டும் போல் எழுந்த ஆசையை தன்னுள் அடக்கி சேமித்துக் கொண்டாள்.

அந்தத் தவிப்பு தொடர்ந்தது.

அம்மா தன்னிடம் பேசமாட்டாளா? என்று அவள் பின்னே பூனையைப் போல அலைந்தாள்.

ஏனோ எரிச்சலை தான் கொட்டினாள்.

சிந்து உழைப்பை முன்னிலும் அதிகப்படுத்தினாள்.

உழைப்போடு பணமும் சேர்ந்தது.

ஹாலில் அம்மா வெற்றிலையில் பாக்கு வைத்து மடித்துத் தர அப்பா வாயில் போட்டு மென்றார்.

கிச்சனில் இரவு சாப்பாட்டை தட்டில் போட்டுக் கொண்டு சாப்பிட அமர்ந்தவளின் காதில் அவர்கள் பேசுவது விழுந்தது.

''என் கடமையெல்லாம் முடிஞ்சது... இப்ப எனக்கிருக்கிற ஒரே ஆசை என்ன தெரியுமா கமலி?''

''சொல்லுங்க!''

''வர்ற அக்டோபர்ல என்னோட அறுபதாவது பிறந்த நாள். நமக்கு அறுபதாம் கல்யாணம் நடக்கணும்னு ஆசைப்படறேன்டி.''

சாப்பிடுவதை நிறுத்திய சிந்து யோசனையாய் விட்டத்தைப் பார்த்தாள்.

12

வீடு நிறைய கூட்டம். அதை வீடு என்று கூறுவதுக் கூட தவறு. இந்தத் தெருவிலிருந்து அந்தத் தெரு வரை நீண்டிருந்த பிரம்மாண்ட செட்டிமார் வீடு.

குலசேகரனுக்கு அண்ணன், தம்பி நான்கு பேர். இருவர் வெளிநாட்டிலும், மற்றவர்கள் சென்னையிலுமாக செட்டிலாகி விட, அந்த வீட்டில் குலசேகரன் மட்டுமே குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். அண்ணன், தம்பிகள் அந்த வீட்டில் தங்களுக்கிருந்த உரிமையை அவரிடம் பணமாகப் பெற்றுக் கொண்டதால் முழு உரிமையும் இப்போது குலசேகரனுக்கு மட்டுமே!

காரைக்குடியில் குலசேகரனுக்கென்று பெயரும், கவுரவமும் இருந்தது. சொந்தமாய் தியேட்டர், பட்டுத்தறி, ரைஸ்மில், சூப்பர் மார்க்கெட் என்று அவரது வியாபார ஸ்தலம் விரிந்திருந்தது. அவர் பேச்சிற்கு தலையாட்டும் அருமை மனைவி வாசுகி. மூத்த மகள் சாந்தினி.. வாழ்க்கைப் பட்டது மதுரையில், அடுத்தவன் விஜயகுமார், அடுத்து மனோரஞ்சன்

இருவரும் தந்தைக்கு உதவியாய் பிஸினஸ் பார்த்துக் கொள்ள கடைக்குட்டி தேவா மட்டுமே விளம்பரபடம், டெலிபிலிம் என்று தனிப்பாதையை தேர்ந்தெடுத்தான். குலசேகரனுக்கு கடைசிப்பிள்ளை என்பதாலேயே அவன் மீது கொள்ளைப்பிரியம். அதனால் மகனின் லட்சியத்திற்கு குறுக்கே நிற்கவில்லை. மற்றவர்களைப் போல் சினிமாவை காரணம் காட்டி நடிகைகளின் பின்னால் ஓடாமல் குறும்படம், விளம்பரப்படம் என்று அதில் மட்டுமே தன் முத்திரையை பதித்த விதமும் பிடித்திருந்தது.

இன்னும் கூட வீடு முழுக்க பெரியவர்களும், வாண்டுகளும் குழுமியிருந்ததற்கு காரணம் தேவா தான். அவன் இயக்கிய குறுநிலமன்னர்கள் என்று குறும்படம். டெல்லி பிலிம் பெஸ்டிவலில் முதல் பரிசு பெற்ற தாய் பேப்பரிலும், டிவியிலும் பார்த்து சென்னையிலிருந்த இரண்டு சித்தப்பாக்களும், அவர்கள் குடும்பத்தாரும் புறப்பட்டு வந்து விட்டனர். வாழ்த்துச்சொல்ல!

எல்லோரும் சாப்பிட்டப்பின்... வேலைப்பளுவால் கடைசியாய் டேபிள் முன் அமர்ந்தார் குலசேகரன். கூடவே அமர்ந்தான் தேவா.

''இன்னுமா சாப்பிடலே?'' பாசமும், பதற்றமுமாய் கேட்டார்.

தேவா புன்னகைத்தான்.

''உங்கக்கூட சாப்பிடணும்னுதாம்பா.. வெயிட் பண்ணிட்டிருந்தேன்.

''அட.. என்ன புள்ள நீ... சின்ன வயசுல நேரத்துக்கு சாப்பிட வேணாமா? அம்மாடி விமலா டிபன் எடுத்து வையம்மா!''

தேவா சிரித்தான்.

''என்ன சிரிக்கிறே?''

''நான் இந்த வயசுல நேரத்துக்கு சாப்பிடணும்.. அப்ப நீங்க?''

போன் பாட்டுக்கு வந்துட்டே இருந்துச்சா.. அதான்! எல்லாரும் உன்னைப் பத்திதாம்பா பேசினாங்க..''

விஜயகுமாரின் மனைவி விமலா கொலுசு சத்தம் சிணுங்க வந்தாள். இருவருக்கும் தட்டு வைத்து இட்லியும், காரச்சட்டினியும் வைத்தாள்.

பேத்திகளுடன் விளையாடிக் கொண்டிருந்த வாசுகியும் அங்கு வந்தாள்.

''ஏம்மா விமலா... தப்பா நினச்சுக்காதே! இந்த இட்லி, தோசை, பூரி, பொங்கல், வடை தவிர வேற எதையும் சமைக்கத் தெரியாதா? இந்த வயசுக்கு செமிக்கிற மாதிரி, அதே சமயம் சத்தானதா சமைக்கத் தெரியாதா?''

''என்ன வேணும்னு சொன்னாதானே அம்மணிக்குத் தெரியும்?'' வாசுகி மருமகளுக்காக பேசினார்.

''கம்பங்களி, கம்பந்தோசை, ராகிபுட்டு, பால்போளி, பணியாரம்...''

அவர் பேசப்பேச தேவாவுக்கு கண்முன்னே சிந்து தட்டில் அத்தனை பலகாரமும் எடுத்து வருவதுப் போல தோன்றியது.

''நீங்க சொல்ற தெல்லாம் எனக்கே சமைக்க வராது. பாவம் சின்ன புள்ளைங்களுக்கு எப்படித் தெரியும்?'' வாசுகி சிரித்த படி சொல்ல.. மஞ்சள் மினுக்கிய அவளின் கன்னங்கள் இன்னும் பளீரிட்டன.

''அதைச் சொல்லு மொதல்ல! நீயே என் ஆத்தாக்கிட்டே தானே சமைக்க கத்துக்கிட்ட?''



''கவலைப்படாதீங்க... நம்ம கடைசி மருமகளை... இதையெல்லாம் சமைக்கத் தெரிஞ்சவளான்னு பார்த்து கட்டி வைப்போம்!''

''சுனந்தாவுக்கு தான் சமைக்கவேத் தெரியாதே அத்தே?!''

அந்த வார்த்தையை கேட்ட தேவாவின் முகம் சூம்பிப் போனதை குலசேகரன் கவனிக்கத் தவறவில்லை.

''என்னம்மா பேசறே... சாப்பிடற எடத்துல நின்னுக்கிட்டு?'' என்றார் உறுமலாய்

''இ...இல்லை மாமா..சுனந்தா...''

''ஒண்ணுபுரிஞ்சுக்கம்மா... சுனந்தா உன் தங்கச்சிதான் நிறைய படிச்சவ... கண்ணுக்கு லட்சணமா இருக்கிற நல்லப் பொண்ணுதான்! தேவா மேல உசரா இருக்கிறான்னு நல்லாவேத் தெரியும். ஆனா, தேவாவுக்கு இஷ்டமில்லாத எந்த விஷயத்தையும் கட்டாயப்படுத்தி திணிக்க முடியாதுன்னும் இந்த வீட்ல எல்லாருக்கும் தெரியும்... பிறகேன் மறுபடி மறுபடி அதைப் பத்தியே பேசணும்?''

விமலாவின் முகம் வருத்தத்தை பூசிக்கொள்ள...''புரியுது மாமா!'' என்றாள்.

தேவா தட்டைப் பார்த்து சாப்பிட்டானேயொழிய.. எண்ணமெல்லாம்...அதில் தெரிந்த சிந்துவின் உருவத்தின் மீதே இருந்தது.

மனதுக்குப் பிடித்தவர்களை பார்க்காமல் பேசாமல் கூட இருந்து விடலாம். ஆனால் நினைக்காமல் இருக்க முடியாதல்லவா?

'எனக்கு பரிசு கிடைத்த விஷயம் அவளுக்குத் தெரிந்திருக்குமா? டி.வி.யில் பார்த்திருப்பாளா?' அவனுள் எழுந்த கேள்வியில் ஏக்கம் மிகுந்திருந்தது.

அன்றிரவு...தனிமையில் கணவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்த வாசுகி... மெல்லக் கேட்டாள்.

''நம்ம மருமகக்கிட்ட காலையில அப்படி பளிச்சின்னு பேசினது எனக்கு சரியாப்படலைங்க!''

''ஏன் வாசுகி?''

''சுனந்தா...தேவாவை தான் கட்டிக்கணும்னு வர்ற வரனையெல்லாம் தட்டிக் கழிச்சிட்டுருக்கா. நம்ம அந்தஸ்துக்கு ஏத்தவ... அழகான படிச்சப் பொண்ணு! தேவாவிடம் எடுத்துச் சொல்லி...''

''அறிவிருக்கா உனக்கு?''

''......?!''

''தேவா என்ன சின்னப்பிள்ளையா? வற்புறுத்தி தலையில கட்ட? அவனுக்குத் தெரியாதா... சுனந்தாவோட தகுதி என்னன்னு வேண்டாம்னு சொல்றான்னா... அவனோட எதிர்பார்ப்பு வேறன்னு நினைச்சுக்க வேண்டியதுதான்.''

''அதுக்காக...அவன் யாரையாவது காதலிச்சா?''

''தப்பென்ன இருக்கு? ஒரு படம் எடுத்து அத்தனை பேர் மத்தியில் முதல் பரிசு வாங்கறவனுக்கு நல்லது கெட்டது தெரியாதா? வேற ஜாதி பொண்ணு அவன் மனைவியா வந்தாசந்தோஷம் தான். நமக்கு புதுசா சொந்த பந்தம் வரட்டுமே! சும்மா...நமக்குள்ளேயே சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு பொண்ணு எடுத்து, பொண்ணு குடுத்துன்னு... புது

சொந்தமே உருவாகலே! நாமளும் கொஞ்சம் பரந்த மனசுள்ள வங்களா இருக்கணும் வாசுகி! தேவா மனசுல என்ன இருக்குன்னு பேசி தெரிஞ்சுக்கணும்!''

கணவர் சொல்வதைக் கேட்டு நம்ப முடியாமல், அரண்டுப் போயிருந்தாள் வாசுகி.

13

தலையில் சம்மட்டியால் அடிப்பதுப்போல் பயங்கரமாய் வலித்தது. கொல்லைப்புறத்தில் கிணற்று மேட்டில் அமர்ந்திருந்த சிந்து தலையை அழுத்தி விட்டுக் கொண்டாள்.

சில்லென்று காற்று வீச... அருநெல்லி மரத்திலிருந்து பற்றியிருந்த காய்கள் சிதறின. ஒன்றிரண்டு இவள் தலையையும் பதம் பார்த்தன. காற்றில் அலைந்த அம்மரத்து இலைகள்... டிராபிக் கான்ஸ்டபிள் போல...கைவீசின. யதார்த்தமாய்... சிதறியிருந்த காய்களை எடுக்க வேண்டுமென்று கூட தோன்றாமல் அமர்ந்திருந்தவளுக்கு...மனசுக்குள் என்னவோ ஒன்று மேலேயும் வராமல்,உள்ளேயும் இறங்காமல் நெருடலாய் இருந்தது. கை,கால் நரம்புக்குள் பூச்சி புகுந்து பிறாண்டுவதுப் போல் இம்சை!

''என்னாச்சு எனக்கு?''

''கமலி...கந்தசாமி வீடுவரைக்கு போய்விட்டு வர்றேன்!''

''சரிங்க.. சாப்பிட வந்துடுங்க...லேட் பண்ண வேண்டாம் மாத்திரைப் போடணும்...''

''சரி...சரி...ஞாபகமிருக்கு!''

செருப்பொலி சத்தம் தேய்ந்து. மறைந்த பின்...எழுந்து உள்ளே வந்தாள் சிந்து.

ஹாலில் டி.வி... வாய்மூடி அமர்ந்திருந்தது.

அப்பா இல்லாத தைரியத்தில் சுவிட்சைப் போட்டாள். டி.வி. சப்தம் கேட்டு... மதிய சமையல் மும்முரத்தில் இருந்த கமலி ஹாலுக்கு வந்தாள்.

''நீயா... அவர் தானோன்னு நினைச்சேன்'' உள்ளே செல்ல முற்பட்டாள்.

''அம்மா...''

''ம்...'' திரும்பினாள்.

''தலைபயங்கரமா வலிக்குதும்மா! கொஞ்சம் தைலம் தேய்ச்சு விடறியா?''

''அ..அது..வந்து...வேலையிருக்கு...தைல வாசத்தோடு சமைக்க முடியாது. அவர் வேற வர்ற நேரம்!'' அவசரமாய் சொல்லிவிட்டு உள்ளேச் செல்ல...

சிந்து கண்ணீர் மல்க பார்த்தாள்.

''நான் உன் பொண்ணும்மா!''

வருத்தத்துடன் சேனலை மாற்றினாள்.

செய்திசேனலின் அடியில் ஸ்க்ரோலிங் ஓடிக் கொண்டிருந்தது.

''பிலிம் பெஸ்டிவலில் சிறந்த குறும்படமாக குறுநில மன்னர்கள்''



தேர்ந்நெடுக்கப்பட்டது. அதன் இயக்குனர் தேவா...நிறைய விளம்பர படங்கள் இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிந்துவின் உதடுகள் மகிழ்ச்சியில் நெளிந்தன. நேற்று மாலை ஹோட்டலில் இருந்த டி.வி.யில் தேவா பரிசு பெற்ற விபரத்தை அறிந்தவளுக்கு உள்ளம் முழுக்க பரவசமாய் இருந்தது.

ஒரு போன் பண்ணி வாழ்த்துச் சொல்லலாமா என்றுக் கூடத் தோன்றியது. ஆனால் அதை அவன் வேறு விதமாய் எடுத்துக் கொள்ளக் கூடும் என்ற பயம் தடுத்தது.

அன்று அவள் பேசியதோடு சரி! அதன் பிறகு அவன் கண்ணிலேயேப் படவில்லை. நாகரீகமாய் ஒதுங்கிவிட்டான். இன்னும் சொல்லப் போனால். இப்போது என்னை பற்றிய ஞாபகம் கூட இருக்காது. நான் தான் அவனை நினைக்கிறேனோ? மனசுக்குள் உண்டான இம்சைக்கும் அவன் நினைவுகள் தான் காரணமோ? என்ன அபத்தம் இது?

தலையை உதறிக் கொண்டு எழுந்தாள்.டிவியை அணைத்தாள்.

மற்ற வேலைகளில் தன்னை ஈடுபடுத்தினாள். ஆனாலும்...சுவற்றில் உமிழப்பட்ட வெற்றிலைக் கறையாய்... நினைவுகள் சிதறலாய் பதிந்திருந்தன.

மறுநாள் நல்ல காய்ச்சலால் அவதிப்பட்டாள் சிந்து. கமலி தன்னைக் கடந்துச் சென்ற சிந்துவை பார்த்தாள். தைல வாசம் மூக்கை நிரடியது. முகம் சோர்ந்துப் போயிருந்தது.

கிரைண்டரில் அரிசியைக் களைந்துப் போட்டிருந்தாள். மாவை அள்ளி அலுமினிய டப்பாவில் ரொப்பி விட்டு கிரைண்டரை கழுவ நகர்ந்தாள்.

''இந்தா!''

அம்மாவின் குரல் கேட்டுத் திரும்பினாள். கையில் காபி டம்ளர். ஹாலில் விஸ்வநாதன்.

''என்னம்மா?''

''காபி!''

''அப்பாவுக்குத்தரணுமா?'' வியப்பாய்கேட்டாள்.

''உனக்குத்தான்!''

''எனக்கா?'' சோர்ந்த முகம் ஆச்சரியப்பட்டது.

''ம்!''

''வேணாம்மா...அப்பா பார்த்துடப் போறார்...!''

''......?!''

''அப்புறம்...எப்பவும் உன் கையால தரணும்னு ஆசை வந்துடும்...வேணாம்மா! இதமான குரலில். ஆனால் வார்த்தைகள் வலிய



''மூச்சை ''முட்டு''கிறது டாக்டர்''
''அதுக்கு ''கொம்பு'' இருக்கா என்ன?''
-சிவ.ராமலிங்கம்,
தூத்துக்குடி.

தாய் வந்தது.

சிந்து போய் விட்டாள்.

கமலிக்கு தன் தவறும், இயலாமையும் புரிந்தது. அவள் இதுவரை காபியோ, டீயோ தன் கையால் சிந்துவிற்குத் தந்ததில்லை. போட்டு சமையல் மேடையில் வைத்து விடுவாள். அவளாய் வந்து எடுத்து குடிப்பாள்.

''அப்படியொரு மோசமான சூழ்நிலை தானே அந்தப் பெண்ணிற்கு "இந்த வீட்டில் நடத்துக் கொண்டிருக்கிறது?'' சற்று நேரம் கசப்பாய் தன்னையுணர்ந்தாள்.

சர்ப்ரைஸ் விசிட்டாக சொல்லாமல், கொள்ளாமல் பாஸ்கரும், சாமுத்ரிகாவும் வந்துவிட விஸ்வநாதனுக்கும், கமலிக்கும் தலைகால் புரியவில்லை.

சமைத்தவைகளை வேனில் ஏற்ற காத்திருந்த சிந்து வாய் நிறைய வரவேற்றாள்.

''கமலி..நான் மார்க்கெட் போய்விட்டு வந்திடறேன். மீனும், கறியும் சமைச்சுப்போடு!''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம்ப்பா! டாக்டர்ஸ் மீட்டிங்க்காக வந்தோம். உடனே கிளம்பிப் போகணும். என்ன இருக்கோ... அதை மட்டும் சாப்பிடறோம்!'' என்றான் பாஸ்கர்.

''ரொம்ப சிம்ப்பிளாதாம்பா சமைச்சிருக்கேன். ரசமும், கொத்தவரங்காய் பொரியலும்!'' கமலி தயக்கமாய் சொன்னார்.

அவனுக்கு பிடிக்காத காய்! முகம் சுளித்தான்.

''ஒக்கே...ஹோட்டல்ல சாப்பிட்டுக்கிறோம் வித்யா. எப்படியிருக்காளாம்? போன் பண்ணாளா?''

''தினமும் போன் பண்றா. ரொம்ப சந்தோஷமா இருக்கா!''

''அண்ணா...அண்ணி!'' என்றபடி இரண்டு பெரிய தட்டுக்களை அவர்கள் முன் நீட்டினாள் சிந்து. அதில் அவள் சமைத்திருந்த அத்தனை பலகாரமும் இருந்தது.

''எ.என்னது?''

''சாப்பிடுங்க...பசியோடு போக வேண்டாமே!''

பாஸ்கர் தயக்கத்துடன் வாங்கி மவுனமாய் சாப்பிட... சாமுத்ரிகாவின் முகமோ வியப்பில் விரிந்தன.

சாப்பிட்டவள், ''வாவ்...எக்ஸலண்ட்!'' என்றபடி சிந்துவை இழுத்து அணைத்துக் கொள்ள...விஸ்வநாதன் முகம் சுளித்தார்.

அவளின் அணைப்பும், உறவு தந்த உரிமையும் சிந்துவிற்கு கண்ணீர வரவழைந்தன.

''சிந்துவுக்கு எப்ப கல்யாணம்?''

யதார்த்தமாய் தான் கேட்டாள் சாமுத்ரிகா. ஆனால் அதிர்வுடன் தலையை பாம்பு போல் உயர்த்தினாள் கமலி.

## 14

''தேவா தம்பி எங்கே அத்தை?'' சுஜாதா ஆவலுடன் கேட்க, வியப்பாய் பார்த்தாள் வாசுகி.



தேடறே? முதல்ல இதைச் சொல்லு! அப்பாவுக்கு முடியலேன்னு பரமக்குடிக்கு போனியே...இப்ப அப்பாவுக்கு எப்படி இருக்கு?''

''பரவாயில்லை அத்தை...அவரோட கவலையெல்லாம் தீபாவோட கல்யாணம் பத்திதான்.!''

''ஏன்...அவளுக்கென்ன? நிறைய படிச்சிருக்கா. இப்ப டில்லியில வேலை பார்க்கிறா இல்லே?''

''ஆமா... டி.வி நியூஸ் சேனல்ல எடிட்டரா இருக்கா!''

''அவளுக்குதான் நிறைய வரன் வந்ததா அப்பா சொன்னாரே! அப்புறமென்ன?'' சற்று நேரம் அமைதி காத்த சுஜாதா அந்த குடும்பத்தின் இரண்டாவது மருமகள். மனோரஞ்சனின் மனைவி. படித்தவள்..வசீகரமானவள்.

''எல்லாமே சரியாதான் நடக்குது அத்தை! தீபாதான் தான் விரும்பிய ஆளையே கல்யாணம் பண்ணிக்குவேன்னு ஒத்தைக்கால்ல நிக்கறா!''

''நல்ல பையனா இருந்தா கட்டி வச்சிடலாமே! உங்கப்பாவும் இதுக்கெல்லாம் தடைபோடறவர் இல்லையே!''

''ரொம்ப நல்ல பையன்ங்கறதுதா விவகாரமே!''

''என்ன சொல்றே?''

''தீபா ரொம்ப மாடர்ன்! ஒன் சைட் லவ்! என் மச்சினருக்கு அவ ஒத்துப்போக மாட்டா!''

வாசுகி குழப்பமாய் பார்க்க... சுஜாதா வாய்விட்டே சிரித்து விட்டாள்.

''ஆமாத்தை! தீபா...நம்ம தேவாவைதான் கட்டிக்குவேன்னு ஆசைப்படறா. அதை தப்புன்னு நான் சொல்ல வரலே. ஏற்கனவே சுனந்தாவும் தேவா தவிர வேற யாரையும் கட்டிக்க மாட்டேன்னு வீம்பா இருக்கிறா. அவரோ பிடிகுடுக்காம இருக்கிறாரு. சுனந்தா வோட கம்பேர் பண்ணினா. என் தங்கச்சி அல்ட்ரா மாடர்ன்! நம்ம வீட்டு சட்டதிட்டங்களுக்கு ஒத்து வரமாட்டா! தேவாவோட டேஸ்ட் ஓரளவு எனக்குத் தெரியும். இதெல்லாம் சரியா வராதுன்னு தீபாகிட்டே எடுத்து சொல்லிட்டுதான் வந்தேன் அத்தே!''

வாசுகி மருமகளை பெருமையாய் நோக்கினார்.

''இப்படித்தான்...தன்னை புகுந்த வீட்டுக்கு ஏத்தமாதிரி பொருத்திக்கணும் சுஜாதா! நீ தெளிவானவ. உன்னை நினைச்சு எனக்கு பெருமையா இருக்கு. தேவாவுக்கு உன்னை மாதிரி ஒரு மருமக அமையணும்மா!''

''என்னைவிட நல்லப் பொண்ணாவே கிடைக்கும். கவலைப்படாதீங்க. அப்பா வீட்ல இருந்தப்ப டி.வி.யில பார்த்துதான் அவருக்கு ஷார்ட் பிலிம்ல பர்ஸ்ட் பிரைஸ் கிடைச்சது தெரியும். பேட்டில பேசலம்னா எல்லா லைனும் பிஸியாவே இருந்துச்சு. நேர்லயே வாழ்த்திடலாம்னு ரெண்டு நாள் முன்னாடியே கிளம்பிட்டேன். எங்கே அவரு?''

''ரஞ்சன் கூட மில்லுவரைக்கும் போயிருக்கான். இப்ப வர்ற நேரம் தான்.''

''அண்ணி வந்தாங்களா அத்தை?''

அவள் அண்ணி என்று குறிப்பிட்டது சாந்தினியை.

''இல்லம்மா... மூணாவதா உண்டாகியிருக்கால்ல? டிராவல் பண்ணக் கூடாதாம்.''

''ஆமாமா...அவங்க ஏற்கனவே கொஞ்சம் வீக்கா இருக்காங்க. பெட் ரெஸ்ட் ரொம்ப அவசியம்.''

வாசலில் கார் சத்தம் கேட்க... எட்டிப் பார்த்தவளின் முகம் மகிழ்ச்சியில் விரிந்தது.

''உங்க சின்னப்பிள்ளை வந்துட்டார்...'' என்றவள் தன் அறை நோக்கி வேகமாகச் சென்றாள்.

''எங்கே போறே...வா... தேவா! இவ்ளோ நேரம் உங்கண்ணி எங்கே எங்கேன்னு கேட்டு நச்சரிச்சுக்கிட்டிருந்தா. நீ வந்ததும். வேகமா போய்ட்டா...அதோ வீர்றா!''

''என்னண்ணி...நல்லார்க்கீங்களா? மாமாவுக்கு இப்ப உடம்புக்கு...''

''அதெல்லாம் விடுங்க...பிரச்சினை எதுவுமில்லே! நீங்க பர்ஸ்ட் பிரைஸ் வாங்கினதுக்காக... அண்ணியோட சின்னப்பரிசு!'' பெருமிதத்துடன் ஒரு பெரிய பார்சலை நீட்டினாள் சுஜாதா.

''என்னண்ணி இதெல்லாம்? வாழ்த்தினாலே போதுமே!''

''நான் ஒரு ஆம்பாளையா பொறந்திருந்தா உங்களை மாதிரி சினி பீல்டுலேதான் இருந்திருப்பேன். இப்ப நீங்க செஞ்ச சாதனை நான் செஞ்ச மாதிரி இருக்கு. உங்களை என்கரேஜ் பண்ண வாழ்த்து மட்டுமே போதாது தம்பி. வாங்கிக்குங்க!''

அண்ணியின் அன்பில் நெக்குருகிப் போனவன் அப்போதே அந்த பார்சலைப் பிரித்தான்.

விலையுயர்ந்த, அட்வான்ஸ் டெக்னாலஜியுடன் கூடிய ஹேண்டிகாமிரா.

''மைகாட்...சூப்பர்ப் அண்ணி...தாங்க்யூ... தாங்க்யூ ஸோ மச்!'' அதீத சந்தோஷத்தின் வெளிப்பாட்டில் சுஜாதாவின் கையைப் பற்றி இறுக்கினான்.



''அப்பனுக்கு பிள்ளை தப்பாம பொறந்திருக்கான்''

''எப்படி சொல்றே?''

''அப்பா ''சிங்க''த்துக்கு போனா பிள்ளை ''சிறுத்தை''க்கு போறான்''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்.

வாசுகி பூரித்துப் போனவளாய் மருமகளின் தலையை கோதி விட்டாள்.

குலசேகரன் மோவாலை தேய்த்து விட்டுக் கொண்டார்.அருகில் வாசுகி அமர்ந்திருக்க, கேள்வியை தேக்கிய முகத்துடன் தேவா. அடுத்தடுத்து விஜயகுமாரும், மனோரஞ்சனும்.

''சுத்திவளைச்சு பேசவரும்பலே தேவா! ஓரளவு உன்னோட குறிக்கோள்ல நீ சாதிச்சிட்டே மேற்கொண்டு நீ படங்களை டைரக்ட் பண்றதா இருந்தாலும் சரி, நம்ம தொழில்களை பார்த்துக்கிட்டாலும் சரி...எனக்கு ஆட்சேபனை



இல்லை!''என்றார் குலசேகரன்.

''இப்பல்லாம் தேவா எங்களோட ஆபீசுக்கு வந்திடறான்ப்பா'' என்றான் விஜயகுமார்.

''தேவைப்பட்டா... இன்னும் படமெடுக்கணும்னு நினைச்சாலும் பண்ணுடா... பிஸினஸை நாங்க பார்த்துக்கறோம்.''

சொன்ன மனோ ரஞ்சனை நன்றியுடன் பார்த்தான் தேவா.

''இப்ப அது பிரச்சனையில்லை! எல்லாரும் உன் கல்யாணத்தை பத்தி பேச ஆரம்பிச்சிட்டாங்க. இதுபத்தி உன்கிட்ட பேசிட்டு ஒரு முடிவெடுக்கலாம்னு இருக்கோம்!''

''.....?''!

''நிறைய வரனெல்லாம் வருது. சொந்தக்காரங்க வேற நச்சரிக்கிறாங்க.''

''சுனந்தாக் கூட நல்லப் பொண்ணுதான்!'' அவளை ஏன்...என்று ஆரம்பித்த மனைவியை முறைந்தார் குலசேகரன்.

''அப்பா...சு..சுனந்தா வே...வேணாம்!''

''.....?!''

''அவ அடிக்கடி நம்ம வீட்ல தங்கி வளர்ந்தப் பொண்ணு. அதனால...அவமேல அந்த மாதிரி ஒரு ஈர்ப்பு வரலேப்பா!''

''சரிப்பா..அவளை யாரும் வற்புறுத்தி உன் தலையில கட்டி வச்சிட மாட்டோம். இன்னும் சொல்லப் போனா...நீ யாரையாவது விரும்பினாக் கூட தைரியமாகச் சொல்லிடு. நல்லப் பொண்ணுங்கறதை தவிர எந்தத் தகுதியும் வேணாம். நம்ம மனுஷாளா இல்லேன்னாக் கூடப் பரவாயில்லை!''

அப்பா அப்படிச் சொன்னதும் குபீரென்று அழுகை புறப்பட்டது. அடக்கிக் கொண்டான்.

'என் மனசுலே எதுவுமே இல்லை!' என்றவளின் முகம் நெஞ்சை அழுத்திப் பிசைந்தது.

'இல்லை... மனசில்லாதவளை நினைப்பதே தவறு. பாவம்... அவள் சூழ்நிலை வேறு. ஆனால் இப்படியோர் தந்தைக்காக... என்ன வேணும்னாலும் செய்யலாமே!''.

''இ... இல்லேப்பா! உங்களுக்கு பிடிச்சப் பொண்ணா பாருங்க... நான் பண்ணிக்கறேன்!'.

இறுக்கமான சூழல் இளகி... அனைவர் முகத்திலும் மகிழ்ச்சிப் பிரவாகம்.

15

மூன்றாவது சப்பாத்தியை சுட்டு, ஸ்டவ்வை அணைத்து விட்டு... கணவரின் தட்டில் போட்டு விட்டு அருகில் அமர்ந்தாள் கமலி.

''போதும்... போதும்... இதை எடு!''

''அட... பேப்பர் மாதிரி மெல்லிசாதானே இருக்கு! ரெண்டு சப்பாத்தி எந்த மூலைக்கு? சாப்பிடுங்க''.

''உன்னோட இதே தொந்தரவு''.

''ஆமா... சின்னக்குழந்தை மாதிரி பிடிவாதம் உங்களுக்கு!'' செல்ல

மாய் சலித்துக் கொண்டாள்.

''அக்கா... அக்கா...!''

வாசலில் ஓர் ஆணின் குரல்.

''எவன்டி அவன் ராத்திரி நேரத்திலே...''

''அண்ணாச்சிக் கடையில வேலை பார்க்கிற பையன்ங்க, சிந்து... மளிகை சாமானுக்கு சொல்லி விட்டிருப்பா... அதான்!'' கமலி எழ முற்பட.

அதற்குள் சிந்து வந்தாள்.

''அதுக்காக நேரங்காலம் தெரியாம... ஆம்பளைங்க வரணுமா?'' முகத்தில் கோபம் கனன்றது.

''மதியமே சொல்லிட்டு வந்தேனே... சீக்கிரமே குடுத்துவிடக் கூடாதா?'' சிந்து பயமும் பதற்றமுமாய் சொன்னாள்.

''இல்லேக்கா... இன்னைக்கு மொத தேதியாச்சே... டெலிவரி அதிகம்!''.

''சரி''. என்று பெரிய அட்டைப்பெட்டியை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு சென்றாள்.

''சனியன்... சனியன்'' சாப்பிடாமல் முணுமுணுத்தார்.

''சாப்பிடுங்க!''

''அது மூஞ்சியப் பார்த்தாலே வெறுப்பா இருக்குடி!''.

''நாளைக்கு வித்யாவை பார்த்துட்டு வரலாம்ங்க. உண்டாகி இருக்காள்ல?'' கமலி பேச்சை மாற்றினாள்.

''ஆமாமா... என் பொண்ணு முகம் கண்லேயே நிக்குது. சம்மந்திக்கிட்டே கேட்டு அவளை இங்கே கொண்டு வந்து ஒரு மாசமாவது வச்சுக்கணும். புள்ளைக்கு வாய்க்கு ருசியா சமைச்சிப் போடணும்.''

''ஆமாங்க... ஆனா, நாம ஆசைப்பட்டா போதுமா? அவங்க ஒத்துக்கணுமே!''.

''கேட்டுப் பார்ப்போமே! பாஸ்கர் எப்ப என்னை தாத்தாவாக்கப் போறானாம்?'' சந்தோஷ மூடுக்கு மாறியிருந்தார் விஸ்வநாதன்.

''சாமுத்ரிகாதான்... இப்போதைக்கு வேண்டாம்னு தள்ளிப் போட்டிருக்காளாம். சின்னஞ்சிறுசுங்க... வாழ்க்கையை அனுபவிக்கட்டும்.!''

''அதுவும் சரிதான்!''

''அப்புறம்...''

''என்ன?''

''எல்லாரும் என்னைக் கேக்கற கேள்விதான்! சாமுத்ரிகா கூட அன்னைக்கு கேட்டாளே!''.

'....?!''

''சிந்துவோடக் கல்யாணம் பத்தி...''

''என்னது?''

''இ .. இல்லைங்க வீடு தேடி வரன்வேற வருது!''

''இதோ பார்! அவளைப்பத்தி என்கிட்டப் பேசாதே! உனக்கு பண்ணணும்னு நினைச்சா... என்ன வேணும்னாலும் பண்ணிக்க. எனக்கு தேவையில்லாத விஷயம். என்னை அழிச்சி ஒண்ணுமில்லாம உக்காரவச்சவளுக்கு கல்யாணம் ஒரு கேடா? கல்யாணத்துக்குன்னு இல்லே... அவளுக்கு



ளுக்கு கல்யாணம் ஒரு கேடா? கல்யாணத்துக்குன்னு இல்லே... அவளுக்கு கருமாதி பண்ணக்கூட பத்து பைசா செலவு பண்ண மாட்டேன்! எப்பிடியிருந்தவன் நான்? என் பணத்துக்கு முன்னாடி ஊரே கைகட்டி வளைஞ்சு நிக்குமே? இன்னைக்கு இதோ... தரையில உக்காந்து சாப்பிடற நிலைமை!

அந்த சனியனால வேதனையைத் தவிர வேற எனக்கு என்ன கிடைச்சது!'' ஆவேசமாய் பேசி மூச்சு வாங்கினார். ''சரிங்க... சரிங்க... கோபப்படாதீங்க... பிரஷர் ஏறுதுங்க!!''.

''தெரிஞ்சே ஏண்டி... அந்த நாயைப் பத்தி பேசறே?'

''மன்னிச்சிடுங்க!''

கிச்சனில்.. மளிகை சாமான்கள் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த சிந்துவின் முதுகு குலுங்கியது அழுகையில்!

கேட்காமல் கொள்ளாமல் தன்னறைக்குள் நுழைந்த சுனந்தாவை பார்த்து திகைப்புற்ற தேவா...சட்டென ஹாங்கரில் மாட்டியிருந்த சட்டையை எடுத்து போட்டுக் கொண்டான்.

''வா..வா..சுனந்தா!''

''என்ன தேவா இப்படி பதறிப்போறீங்க?''

அடக்க மாட்டாமல் சிரித்த சுனந்தா வெகுவாய் அழகாய் இருந்தாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே...எப்ப வந்தே? நீ மட்டும் தனியாவா வந்தே?''

இயல்பாய் பேச முற்பட்டான்.

''ம்ஹூம்...அப்பா, அம்மா எல்லாரும் வந்திருக்காங்க.''

''.....?!''

''ஏன்னு கேக்கலையே?''

''ஏன்?''

''கல்யாண விஷயம் பேசத்தான்!''என்றாள் குறும்புடன் அவனைப் பார்த்து.

''.....?!''

''பேச்சே வராதே! நேரடியாவே கேக்கறேன். எனக்கு என்ன குறை தேவா? உங்களை கல்யாணம் பண்ணிக்கற தகுதி எனக்கில்லையா?'' சட்டென குரல் தீவிரமானது.

சலிப்பாய் இருந்தது தேவாவுக்கு.

''சொல்லுங்க தேவா... பாருங்க...உங்க பீல்டுல ஜொலிக்கிற நடிகைங்களை விட நான் அழகாயில்லை?''

''.....?!''

''உங்க தொழில்ல நான் தலையிட மாட்டேன் தேவா. நீங்க எந்த லேடீஸ்கிட்டேப் பேசினாலும் நான் சந்தேகப்படமாட்டேன். இன்னும் என்னை நான் எப்படி மாத்திக்கணும் சொல்லுங்க!'' ''வ்வாட்?''

''உன் மனசை மாத்திக்க சுனந்தா...அது போதும்!''

''உன்னை எனக்கு ரொம்பவே பிடிக்கும். உன்னை அண்ணியோட தங்கச்சியா பார்க்கலே சுனந்தா... என் தங்கச்சியாதான்...''

''ஸ்டாப்... ஸ்டாப்பிட் தேவா! வாட் நான் சென்ஸ் திஸ்? உங்க வாயால என்னை அப்படிச் சொல்லாதீங்க'' கண்கள் கலங்கின.

''என்னைப் புரிய வைக்க... வேற என்னால் சொல்ல முடியாது!''

சற்று நேரம் மவுனம் சுற்றி வந்தது.

சுனந்தா தன்னை இயல்பாக்கிக் கொள்ள அறையில் பார்வையை ஓட விட்டாள்.

சுத்தமாய்...எளிமையாய் இருந்தது. டேபிளில் ஆங்கில புத்தகங்கள், சி.டி.க்கள். சுவற்றில் பலவித போட்டோக்கள் அழகாய் மாட்டியிருந்தன. அதில் ஒன்று ஒரு பெண் குழந்தைக்கு பாலூட்டும் காட்சி.அழகாய் சில் அவுட்டில் விரசமின்றி இருந்தது.

சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தவள், ''அருமையான ஸ்டில் இது! இதை நீங்கதானே ஷூட் பண்ணினது?''

''.....?!''

''இதை ஷூட் பண்ணும்போது உள்ள சூழ்நிலை எல்லாமே எனக்குப் புரியும் தேவா! நீங்க வேறப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டா...இதை காரணம் காட்டியே அவ பிரச்சனைப் பண்ணுவா தெரியுமா?''

''பிரச்சனையா?''

''ஆமாம்...அந்தப் பொண்ணோட போஸைப் பாருங்க.பக்கத்தில் நிக்கற எந்த ஆணாவது சபலப்படாம இருப்பானா?''

''ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே சுனந்தா!''

''கடவுளே...புரிஞ்சுக்குங்க.. மத்தப் பொண்ணுங்களால தான் புரிஞ்சுக்க முடியாதுன்னு சொன்னேன்...என்னை இல்லை!''

''பிளீஸ் சுனந்தா...எனக்கு நிறைய வேலையிருக்கு. லீவ் மீ அலோன்!''

''.....?!''

''இந்த ரூமை விட்டு மட்டுமில்லை...உன் மனசுல என்னைப் பத்திய எண்ணங்களையும் விட்டுதான்!''

கனத்த உள்ளத்துடன் வெளியேறினாள் சுனந்தா.

## 16

ரகுபதியும், மலர்விழியும், குலசேகரனின் எதிரில் அமர்ந்திருந்தனர். வாசுகி கையில் தட்டுடன் நின்றிருந்தாள்.

''காபி ரொம்ப நல்லாயிருக்கு... சுஜாதா போட்டாளா?'' ரகுபதி ரசித்துக் குடித்தபடி கேட்டார்.

''இல்லே சம்மந்தி...உங்கப் பொண்ணு விமலா போட்டதுதான்!'' என்றாள் வாசுகி.


''பரவாயில்லையே... அவ இந்தளவுக்கு போடறாளே!''

''என்ன அப்படி சொல்லிட்டீங்க? அவ எல்லாமே நல்லா சமைக்கிறாளே...!''

''சுனந்தா கூட மாஞ்சு...மாஞ்சு அவ அம்மாக்கிட்டே கேட்டு கேட்டு சமைக்கக் கத்துக்கறா!''

''ஆமாங்க...எவ்வளவுதான் படிச்சிருந்தாலும் புகுந்த வீட்ல...வாய்க்கும், வயித்துக்கும் பதமா சமைக்கக் கத்துக்கறதும் நல்லதுதானே? சுனந்





தாவுக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சிட்டீங்களா சம்மந்தி?'' டம்ளரை மனைவியிடம் நீட்டியபடி கேட்டார் குலசேகரன்.

''நிறைய வருது. அவளுக்கு உங்க வீட்ல வாக்கப் படணும்னு ஆசை! விமலா எல்லாம் சொன்னா. வாஸ்தவம் தானே? தேவாவுக்கு ஈடுபாடு இல்லேன்னா அதைப் பத்தி பேசறதே அழகில்லையே! சுனந்தா கொஞ்சம் முரண்டுப் பிடிக்கிறா. சின்னப்பிள்ளை தானே? போகப் போக சரியாய்டும். ஆமா..எங்கே வாண்டுங்கள்லாம் காணோம்?'' ரகுபதியின் குரலில் சிறிது வருத்தம் தென்பட்டது.

''உங்க பேரப்பிள்ளைங்கதானே? இன்னைக்கு ஸ்கூல்ல ஏதோ 'ஆனுவல் டே' யாம்! போயிருக்காங்க.

சனிக்கிழமையும் அதுவுமா பிள்ளைங்க இல்லாம வீடு வெறிச்சுன்னு இருக்கு. சாயந்திரம் வந்துடுவாங்க.. இருந்து பார்த்துட்டுப் போங்க....''

''இல்லே சம்மந்தி, இன்னைக்கு திருச்சிப் போறோம்... மருமகளோட வீட்டுக்கு பத்திரிகை வைக்கணும்... நிறைய உறவுக்காரங்க வீட்டுக்குப் போக வேண்டி இருக்கு... அவசியம் வந்திடணும் சம்மந்தி... இந்தாங்க...''

பெரிய தட்டில் பூ, பழம், வெற்றிலை பாக்கு இனிப்புடன் பத்திரிகை வைத்து நீட்டினர்.

''நாங்க வராம எப்படி? குடுத்து வச்சிருக்கணுமே... கண்டிப்பா வந்து கலந்துக்கறோம்...'' என்றபடி தம்பதி சமேதராய் வாங்கிக் கொண்டனர்.

''சுனந்தா எங்கே?''

''தேவாகிட்டே பேசிட்டிருக்கா...''

''அப்ப நாங்க கிளம்பறோம் சம்மந்தி...''



"12 வயசுலருந்து நான் இந்த டாக்டர்கிட்டதான் ட்ரீட்மெண்ட் எடுத்துட்டிருக்கேன்!"

"ஆச்சரியமா இருக்கே பன்னெண்டு வயசுல இவர் எப்படி டாக்டர் ஆனாரு?"

-ப.கோபிபச்சமுத்து.
கிருஷ்ணகிரி.

அவர்கள் சென்றபின் ரைஸ் மில் தொழிலாளிகள் பற்றிப் பேசுவதற்வாக தந்தையின் அறைக்கு வந்தான் தேவா.

யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்த குலசேகரன்.'' சரி.. அப்படியே முடிச்சிடுங்க... வச்சிடறேன்'' என்று செல்லை அணைத்து சோபாவில் போட்டு விட்டு ''வா.. தேவா...'' என்றார்.

''அப்பா ரைஸ்மில் லேபர்ஸ்...''

பேசிக் கொண்டிருக்கும் போதே கையமர்த்தினார்.

"தெரியும்ப்பா... அந்த பிரச்சனை பத்தி விஜயகுமாரும், மேனேஜரும் பேசிட்டாங்க! அதை அவங்க பார்த்துக்கட்டும்.

நீ பிரீயா இருப்பா. அடுத்து



லேப்பா..'' என்றபடி டேபிள் மீது இருந்த திருமணப் பத்திரிகையை எடுத்தான்.

சஷ்டியப்ப பூர்த்தி விழா என்று குறிப்பிட்டு கீழே மணமக்கள் பெயராக ரகுபதி, மலர்விழி என்றிருந்தது.

நெற்றியைச் சுருக்கிய மகனைப் பார்த்து ''நம்ம விமலாவோட அப்பாவுக்கு அறுபதாம் கல்யாணமாம். பத்திரிகை வச்சாங்க... அன்னைக்குன்னு வேறெந்த கமிட்மென்ட்டும் வச்சுக்காதே.. குடும்பத்தோட கலந்துக்கறோம்....''

''சரிப்பா... இது.. இந்த மாதிரி எம்ப்பா உங்களுக்குப் பண்ணலே? நல்ல விஷயமாச்சே?''

''சரிதான் ஆனா, பிஸினஸ் அதுஇதுன்னு ஓடினதுல இதெல்லாம் தோணலே.. ஆச்சு... அறுபத்தாறு வயசு முடிஞ்சாச்சு. பெத்தவங்களுக்கு இதைப் பண்ணணும்னு பிள்ளைங்களுக்குதாம்பா தோணணும்..'' என்றார் சிறு ஏக்கமும், வருத்தமுமாக.

''ஸாரிப்பா... எனக்கு இதெல்லாம் சரியாத் தெரியாது. நானும் ஷூட்டிங், ஷூட்டிங்னு கடமையை தவறிட்டேன்!''

''அட... நீ சின்னப்புள்ள! உனக்கென்னத் தெரியும்? உனக்கு மூத்தவங்க யோசிக்க வேண்டிய விஷயம் இது. சரி.. அவங்களும் மில்லு, ஆபீஸ்னு அலையறாங்க அவங்களை சொல்லியும் குத்தமில்லை. அதை விடு... உனக்கு ஏகப்பட்ட அலையன்ஸ் வந்திருக்கு தேவா.... போட்டோஸ் இருக்கு பார்க்கறியா?''

''இ.. இல்லேப்பா... நீங்களே பார்த்து முடிவு பண்ணுங்க!''

அவசரமும், தடுமாற்றமும் வந்தது வார்த்தை. சில கணங்கள் மகனை உற்றுப் பார்த்தவருக்குப் புரிய, பயல்குழப்பமாய் இருக்கிறான்

சிறு கவலை அவரை ஆட் கொண்டது.

கொல்லைப்புறத்தில் வாழைஇலை அறுப்பதற்காக வந்தாள் கமலி.

கிணற்றோரமாய்... குரல் தாழ்த்தி யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தாள் சிந்து.

''சரி.... செலவைப் பத்தி கவலைப்படவேணாம். நான் சொன்ன மாதிரி அழகா அடிச்சுக் குடுக்கணும். ரெண்டு நாள்ல எனக்கு இன்விடேஷன் கிடைச்சாகணும் ஓக்கே...ம்''

அவள் பேசியதில் சில வார்த்தைகள் கமலியின் காதில் விழுந்தாலும் தூக்கிவாரிப் போட வைத்தது.

''இன்விடேஷனா? எதுக்கு?''

வாய்வரை வந்த கேள்வியை சிந்துவின் முகம் பார்த்து விழுங்கிக் கொண்டாள்.

வழக்கத்திற்கு மாறாக அவள் முகத்தில் குடிக் கொண்டிருந்த உற்சாகம். எதையோ மறைக்கும் கள்ளத்தனம்.

இரண்டு மூன்று நாட்களாய்.. தனியே குசுகுசுவென அடிக்கடி போனில் பேசிக் கொண்டிருப்பதை கமலி கவனிக்கத் தவறவில்லை.

குழப்பமும் பயமுமாய் வளைய வந்தாள் கமலி. அடுத்தடுத்து வந்த நாட்களில் சிந்து பரபரப்பாய் இயங்கினாள்.

அன்று.... பலகார வகையறாக்களோடு வேனில் ஏறிச் சென்ற பத்தா

வது நிமிடம் ஒரு இளைஞன் பேக் செய்யப்பட்ட பண்டலோடு வீட்டிற்கு வந்தான். பெல் ஒலிக்கும் சப்தம் கேட்டு வாசலுக்கு வந்தாள் கமலி.

''யாருப்பா வேணும்?''

''இங்கே சிந்துங்கறது...?''

''இந்த வீடு தான்.. என்ன விஷயம்?''

''அவங்க இல்லீங்களா?''

''வெளியே போயிருக்காங்க.. நான் அவங்கம்மா தான்.... என்ன விஷயம்?''

''அப்ப சரி... நான் திருமலை பிரின்டிங் பிரஸ்லேருந்து வர்றேன். உங்கப் பொண்ணு கல்யாண இன்விடேஷன் பிரின்ட் பண்ணக் குடுத்திருந் தாங்க. இன்னைக்கு ஈவ்னிங் வந்து வாங்கிக்கறதா சொல்லியிருந்தாங்க. பத்திரிகை ரெடியாயிடுச்சு. லேட் பண்ண வேணாம்னு வீட்டுக்கே குடுத் துட்டு வரச் செ்ால்லி கொடுத்தனுப்பினார் முதலாளி... இந்தாங்க!''

கமலிக்கு தலை கிறுகிறுவென சுற்றியது.

17

அட்டைப் பெட்டியுடன் உள்ளேச் சென்றவளுக்கு.. பெரிய பூகம்பம் வருவதற்கான அறிகுறித் தோன்றியது.

கல்யாண இன்விடேஷன்னா.. திருட்டுத்தனமா கல்யாணம் பண்ணிக்கப் போகிறாளா! ஐயோ... கடவுளே.. என்னாகப் போகுதோ... அவருக்குத் தெரிஞ்சா... கொலையே விழுமே....

யாரை பண்ணிக்கப் போகிறாள்? அன்று எவனோ ஊர்பேர் தெரியாத ஒருத்தன் வீடேறி வந்து பொண்ணுக் கேட்டானே? அவனையா? இதயம் படபடவென துடிக்க.. தாங்கமாட்டாத ஆத்திரத்தோடு அட்டைப் பெட் டியை பிரிக்க முற்பட்டாள்.

வாசலில் ''கமலி'' என்றழைத்தபடி உள்ளே வந்துக் கொண்டிருந்தார் விஸ்வநாதன்.

''இதோ...வர்றேங்க..'' பதைப்புடன் அந்த அட்டைப்பெட்டியை மறைக்க.... அறையின் ஓரமாய் சுவரோடு பதிக்கப்பட்டிருந்த மரபீரோவைத் திறந்தாள். அதை இப்போது... வித்யாவிற்கு பிறகு சிந்து பயன்படுத்தி வந்தாள்.

பெட்டியை உள்ளே வைத்தவள்.... இரண்டு மூன்று புது துணிக்கவரைப் பார்த்து திகைத்தாள். சட்டென எடுத்துப் பார்த்தவளுக்கு ஒரு கணம் இயக்கமே நின்றுப் போனது.

பட்டுப்புடவை, வேட்டி, சட்டை என திருமணத்திற்கு தேவையான உடைகள்!

'கிராதகி'

''கமலீ..'' அதட்டலாய் கத்தினார்.

''வ... வந்துட்டேங்க!'' பீரோ கதவை மூடிவிட்டு ஓட்டமும், நடையுமாய் வந்தாள்.

கணவரின் நிலையைப் பார்த்து பயந்தாள்.

மீசை துடிக்க, கண்கள் அனல் கக்க, மூக்கு விடைக்க நின்றிருந்தார்.



டேபிள் மீது மூடி வைத்திருந்த சொம்புத் தண்ணீரை எப்போதும் போல் நீட்டினாள்.

அதை வாங்கி ஆத்திரத்துடன் வீசி எறிந்தார். சொம்பு தண்ணீரின் கனம் தாங்காமல் நசுங்கி, உருண்டோடியது.

''கொதிச்சுப் போய் வந்திருக்கேன். தண்ணி குடுத்து அணைக்கப் பார்க்கறியா? அந்த சனியன் எங்கே?''

''யா...யாருங்க?''

''என்னை வாட்டி வதைக்கிறது ஒரே சனியன் தானே? எங்கே அவ?''

''கடைக்குப் போயிட்டா.. ஏங்க?''



''ரவுடி படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பான்''

''குத்தம் செய்''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி.

'ஒருவேளை இந்த கல்யாண விஷயம் தெரிஞ்சிருக்குமோ? நாமும் சொல்லிடலாமா?'

''வரட்டும்..வரட்டும்.. தெரிஞ்சவங்களுக்கு சொல்லி அனுப்பு. இந்த வீட்ல ஒரு சாவு விழப்போவுதுன்னு....''

''ஐயோ... என்னாச்சுங்க?''

''அப்பவே கலைக்கச் சொன்னேன்! முடியலேன்னு பெத்துக்கிட்டே. பெத்தப்பிறகாவது கோழியை திருகற மாதிரி கழுத்தைத் திருகி சாகடிச்சிருக்கலாம். அதையும் செய்யலே. பெரிசா வசனம் பேசிட்டு நானே வச்சுக்காப்பாத்திக்கறேன்னு தூக்கிட்டுப் போனா உன் அம்மா. சனியன் அவங்களையும் முழுங்கிட்டு மறுபடி இங்கேயே வந்துடுச்சு

இப்ப அந்த ஓடுகாலி என்னப் பண்ணியிருக்காத் தெரியுமா? நேத்து ஆர்த்தி நகை கடையில அரை பவுன்ல தாலி வாங்கியிருக்கா. தெரிஞ்சவங்க ஒருத்தர் பார்த்து சொன்னாங்க. உன் பொண்ணுக்கு கல்யாணம் பிக்ஸ் ஆயிடுச்சா? சொல்லவேயில்லேன்னு கேட்டப்ப.. உயிரேப் போயிடுச்சு. எவ்ளோ தைரியம்? கமுக்கமா தன் கல்யாணத்தை தானே நடக்கிற திமிர் சம்பாதிக்கிற ஆணவம்! இதோ பார்... இனி அவ இங்கே இருக்கக் கூடாது''

இதற்கு மேலேயும் மூடி மறைக்க விரும்பாமல் ''ஆமாங்க பீரோவுல பட்டுப்புடவையும், வேட்டி, சட்டையும் பார்த்தேங்க. பிரஸ்லேர்ந்து இப்பதான் இன்விடேஷன் கூட வந்தது...''

''என்னது? அதையெல்லாம் எடுத்துட்டு வா!''

அடுத்த சில கணங்கள் களேபரமானது. வெடித்த எரிமலையாய் வெறுப்பை கக்கி கண்கள் சிவந்தார் விஸ்வநாதன்.

பட்டு சேலையும், வேட்டியும் அவரை எகத்தாளமாய் பார்த்து சிரித்தன.

''அன்று அவ்வளவு சொல்லியும் கேட்காமல் ரகசியமாய் திருமணம் செஞ்சுக்கிற அளவுக்கு நெஞ்சழுத்தமா? விடுவேனா? இன்னைக்கு என் கையால தான் அவளுக்கு சாவு!''

இரையை பார்த்து ஓடிவந்த கோழியைப் போல் அந்த நேரத்தில்

தானே வந்து மாட்டினாள் சிந்து. பிரஸ்காரர் வீட்டிற்கு இன்விடேஷன் கொடுத்தனுப்பி விட்டதாக போன் பண்ணியதும்... கடவுளே... அம்மா அதைப் பிரிச்சுப் பார்க்காமல் இருக்கணும் என்று வேண்டிக் கொண்டே வந்தாள்.

ஆனால் அவள் வேண்டுதலை கடவுள் காது கொடுத்து கேட்க வில்லை.

ஹாலில் உறுமலுடன் அப்பாவும், விசும்பலுடன் அம்மாவும், கசங்கிய பட்டுப்புடவையும் இருந்ததை பார்த்ததுமே... படியேறிய கால்களில் பலம் குறைந்து.... வேகம் தடைப்பட்டது.

அவளைப் பார்த்ததும் தான் தாமதம், பாய்ந்து வந்த விஸ்வநாதன் அவள் தலைமுடியைக் கொத்தாய் பற்றி சுவற்றில் மோதினார்.

வலியில் அலறி கீழே விழுந்தவளை ஆணியில் மாட்டியிருந்த பெல்ட்டை எடுத்து விளாசினார்.

''ஐயோ.. அப்பா.. அப்பா வலிக்குதுப்பா!''

''சனியனே.. செத்துப்போ! என் பணம் செல்வாக்கு எல்லாமே உன்னால போச்சு. இப்ப என் கவுரவத்தையும் வீதிக்கு கொண்டு வந்து சந்தி சிரிக்க வைக்க திட்டம் போடறியா? எவ்ளோ திமிர் இருந்தா...'' கை வலிக்க வலிக்க விளாசினார்.

உடம்பெங்கும் ரத்தக்கோடுகளால் துடித்தாள்.

''வலிக்குதுப்பா... முடியலேப்பா.. நான் என்னப்பா தப்பு பண்ணினேன்?'' கண்ணீர் வழிய அழுதபடி கேட்டாள்.

''இத்தனையும் பண்ணிட்டு, என்ன தப்புப் பண்ணினேன்னா கேக்கறே? உன்னை உயிரோட விடறதே தப்பில்லையா?''

''சாகடிங்க.. சந்தோஷமா செத்துப்போறேன். ஆனா, நான் என்ன தப்புப் பண்ணேன்னு சொல்லிட்டு சாகடிங்க!

''இதெல்லாம் என்ன?'' பட்டுப்புடவை வேட்டியை எடுத்து முகத்தில் வீசினார்.

''கல்யாணத்துக்காக எடுத்தது!''

''அப்புறம் என்ன தப்புப் பண்ணேன்னு கேக்கறே?''

''இப்பவும் அதையேதாம்பா கேக்கறேன்''

''கல்யாணம்னு சொன்னேன். யாருக்குன்னு சொன்னேனா?''

''ரகசியமா கல்யாணம் பண்ணிக்கறவங்க பத்திரிகை எல்லாம் அடிச்சாப்பா கல்யாணம் பண்ணுவாங்க?''

''பிரிச்சுப்பாருங்க'' ரத்தம் தோய்ந்த கைகளுடன் பண்டலைப் பிரித்து ஒரு பத்திரிகையை எடுத்து நீட்டினாள்.

மணிவிழா!

விஸ்வநாதன்- கமலி.

பெயர் கண்ணில் அறைய ....விழியகல, நெற்றி சுருங்கப் பார்த்தார்.

''ஆமாம்ப்பா! அன்னைக்கு உங்க அறுபதாம் கல்யாண ஆசையை அம்மாக்கிட்ட வெளிப்படுத்தினதை கேட்டப்பவே முடிவு செஞ்சேன். எப்படியாவது இதை நிறைவேத்தணும்னு. நீங்க என்னை வெறுத்தாலும் நான் உங்களை ரொம்ப நேசிக்கறேன்ப்பா! இது அன்பு மட்டுமல்ல... பெத்தபுள்ளையா... என்னோட கடமையும் கூட! பெத்தவங்களோட



மனசை குளிரவைக்கணும். நான் அறிஞ்சோ, அறியாமலோ உங்களை நெருப்புல வாட்டிட்டேன்ப்பா! அதுக்குப் பிராயச்சித்தமா இதை செய்ய ஆசைப்படறேன். அறுபதாம் கல்யாணம் எத்தனைப் பேருக்கு வாய்க்கும்? அதை நடத்தற உரிமையை மட்டும் எனக்கு குடுங்கப்பா.. பிளீஸ்... மறுத்துடாதீங்க!''

''இந்த இன்விடேஷன்ல கூட அண்ணன் பேரும், அக்கா பேரும்தான் போட்டிருந்தேன். என் பேர் போட்டுக்கலேப்பா! எனக்கு உங்க மனசுல மட்டும் கொஞ்சம் இடம் குடுங்கப்பா.... அது மட்டும் போதும்!'' சிந்து கைகூப்பி உடல் குலுங்க அழ....

விஸ்வநாதனின் மனதை எதுவோ அறுக்கிறது.

அது.. சிந்துவைப் பற்றி சிலந்தி வலையாய் பின்னப்பட்ட வெறுப்பு வலை.

## 18

மணவறையில் அமர்ந்திருந்த விஸ்வநாதன் பக்கத்திலிருந்த மனைவியை ஏறிட்டுப் பார்க்க, பட்டுப்புடவையும் மாலையும் மஞ்சள் மின்னும் முகமுமாக... சந்தோஷத்தை மீறிய சங்கடம் அவரைப் போலவே அவள் முகத்திலும் பாவி இருந்தது.

தனியாளாய் சிந்து அத்தனை வேலைகளையும் செய்து முடித்து.. முக்கியமான உறவுக்காரர்களை வாடகைக்கு பஸ் வைத்து அழைத்து.. இதோ... திருவிடைமருதூர் கோவிலில் அறுபதாம் கல்யாணம்.

பாஸ்கரும், சாமுத்ரிகாவும் உறவுக்காரர்களை நலம் விசாரித்து வலம் வர.. வாந்தியும், மயக்கமுமாய் மசக்கையாய் இருந்த வித்யா.... ஒரு ஓரமாய் அமர்ந்து விட்டாள்.

ஐயர்.. மறந்துப்போன பொருட்களை ஒவ்வொன்றாய் சொல்ல.... சளைக்காமல் கடைக்குச் செல்வதும் வருவதுமாய் இருந்தாள் சிந்து.

அவளைப் பார்க்க, பார்க்க, கன்னத்தில் பளாரென்று அடிப்பது போல் வலித்தது.

''அஞ்சு இளநீர் வேணும்!'' ஐயர் கேட்டார்.

''இதோ ரெண்டே நிமிஷத்துல வாங்கிட்டு வந்திடறேங்க....''

சிந்து மறுபடியும் கோவில் வாசல் நோக்கி நகர்ந்தாள்.

சற்று தள்ளி பிரகாரத்தில் ஒரு பெண்மணி. அழுதுக்கொண்டிருந்த ஏழு வயது பேத்தியை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அப்போது... அவள் கொண்டையிலிருந்து கதம்ப பூ கீழே விழுந்தது.

கவனித்த சிந்து அதை எடுத்து ''அம்மா.. அம்மா உங்களைத்தான்'' என்றழைத்தாள்.

திரும்பினாள் வாசுகி.

''என்னையா?''

''ஆமாம்! உங்கள் பூ.. கீழே விழுந்துவிட்டது!''

''ஓ... நன்றியம்மா!'' பூவை வாங்கிக் கொண்டு புன்னகை பூத்தாள்.

''பாப்பா.. ஏன் அழறா?''

''ஐஸ்கிரீம் வேணும்னு அடம் பிடிக்கிறாம்மா!''

''குட்டிக்கு ஐஸ்கிரீம் வேணுமா? வாங்கி வரட்டுமா? வெளியே கடைக்குதாம்மா போறேன். வாங்கிட்டு வர்றேன்''

''உனக்கெதுக்கும்மா சிரமம்... நான் வேற....''

''எனக்கு எந்த சிரமமும் இல்லேம்மா! வயசானவங்க.. நீங்க எங்கே தேடிப்போய் வாங்குவீங்க... அஞ்சு நிமிஷத்துல வந்துட்றேன்...''

சொன்னபடியே இளநீர் பையை வலதுகைகளிலும் ஐஸ்கிரீம் கப்பை இடது கையிலும் சுமந்தபடி ஏழே நிமிடத்தில் வந்தாள் சிந்து.

''...ம்மா.. இந்தா ஐஸ்கிரீம்!''

''குழந்தை வாங்கிக் கொண்டு மலர்ந்த முகத்துடன் ஓட... வாசுகி பர்ஸை எடுத்தார்.

''எவ்வளவு ஆச்சும்மா?''

''என்னம்மா நீங்க? அதெல்லாம் வேணாம். அதோ அந்த பிரகாரத்துல எங்க அப்பா அம்மாவுக்கு அறுபதாம் கல்யாணம் நடக்குது. நீங்களும் வந்து கலந்துக்கிட்டா ரொம்ப சந்தோஷப்படுவேன்!''

வாசுகி அவளையே ஆச்சர்யமாய் பார்த்தாள்.

'என்ன லட்சணமான முகம், பொறுப்பான பேச்சு. மரியாதையான நடவடிக்கை? இவள் மருமகளாக கிடைக்க எந்த மாமியாருக்கு வாய்ச்சிருக்கோ?'

''நேரமாச்சு... நான் வரட்டுமாம்மா?''

''போய் வாம்மா! நானும் இங்கே ஒரு சஷ்டி... பூர்த்தியில கலந்துக்கத்தான் வந்தேன். முடிஞ்சதும் உங்க வீட்டு விழாவுக்கு வர்றேன்!'' வாசுகியும் விடை பெற்றாள்.

''எங்கேம்மா போய்ட்டே... அப்பா தேடறார் பார்..'' தேவா அம்மாவின் எதிரில் வந்து நின்றான்.

''வர்ஷினிக்குட்டி இதுவேணும். அது வேணும்னு கேட்டு அடம்பிடிச்சா...''

''சரி.. நீ போம்மா.. அவளை நான் பார்த்துக்கறேன்..''

அம்மா நகர....வர்ஷினி ஓடி வந்து அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

''மாமா.. எனக்கு இன்டர் ஜாய் வேணும்!''

''கல்யாணம் முடியட்டும்.. அப்புறப் வாங்கித் தர்றேன்''

''எனக்கு இப்பவே வேணும்!'' சிணுங்க ஆரம்பித்தாள். அவளின் பிடிவாதம் அவனுக்கும் தெரியுமே!

''சரியான தினிப் பண்டாரம்.. வா!'' அழைத்துக் கொண்டு வெளியேறினான்.



''ஏன்டா உன் மனைவி கிட்டே சண்டை போட்டுட்டு மாடியிலிருந்து இறங்கி வந்தே?''

''நீங்க தானே சொன்னீங்க பிரச்சினை வந்தா அடுத்தவர் இறங்கி வரணும்னு''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்.



''நேரமாச்சு பார்.. சாந்தினி.. உன் புருஷன் எங்கேம்மா?'' என்றபடி குலசேகரன் வர.... ''இங்கே தாம்பா இருந்தார்'' என்று தேடிக் கொண்டு நகர.... ''ஒரு இடத்துக்கு வந்தா... ஒரே இடமா இருக்கத் தெரியாதா?'' என்று வேகமாய் திரும்ப.. யார் மீதோ மோதி.. ணங்கென தட்டு உருளும் சப்தமும், மேலெல்லாம் பூக்கள் விழுந்த அதிர்ச்சியுமாகப் பார்த்தார்.

அதே அதிர்ச்சியும், மருட்சியுமாய் நின்றிருந்த அந்த இளம் பெண்ணின் முகம்.. அவரை புன்னகைக்க வைத்தது.

''ஸாரிங்க.. தெரியாம மோதிட்டேன். அடிபட்ருச்சா?''

''பொறு.... பொறு! மோதினது நான்தான். இதோ... பூவெல்லாம் சிதறிக்கிடக்கு... என்னாலதானே..?''

''இல்லீங்க. நான் அவசரமா ஓடி வந்தேன்.. அதனால தான்...''

''சிந்து... இங்கே என்னப் பண்றே? ஐயர் உதிரிப்பூ கேட்டாரே...'' சாமுத்ரிகா அழைத்தபடி வர... ''இதோ தர்றேன் அண்ணி'' என்று வேகமாய் நகர்ந்து விட்டாள்.

சாமுத்ரிகா, குலசேகரனைப் பார்த்து வியந்தாள்.

''அங்கிள் நீங்க எங்கே இங்கே?''

''என் சம்மந்திக்கு சஷ்டியப்த பூர்த்தி.. அதோ அங்கே நடந்துட்டிருக்கு... ஆமா நீ எங்கே இப்படி?''

''அதே சஷ்டியப்த பூர்த்திக்குத்தான். என் மாமனார், மாமியாருக்கு நீங்களும் வாங்க அங்கிள்!''

''இங்கே முடிச்சிட்டு வர்றேன். பரவாயில்லையே.... நீயும், உன் புருஷனும் பிஸியான டாக்டர்ஸ். இருந்தும் இதையெல்லாம் எடுத்துப் பண்றதுக்கு நேரமும், மனசும் வேணும்!''

சாமுத்ரிகா சங்கடமாய் நெளிந்தாள்.

''ஆக்சுவலா... நாங்க பண்ணியிருக்கணும்.. ஆனா.. அந்த எண்ணமே தோணல....''

''பின்னே?''

''இப்ப ஒரு பொண்ணுப் போனாளே...''

''ஆமா!''

''அவ என் நாத்தனார்தான். பேரு சிந்து! அவ தனியாளா நின்னு நடத்தற கல்யாணம் இது!''

''நிஜமாவா?''

''ஆனா. ரொம்ப பாவப்பட்ட பொண்ணு அவ...'' என்றபடி அவள் கருவிலிருந்தே உதாசீனப்படுத்தப்பட்டது முதல் சொல்லி முடித்தாள்.

வாய்பிளக்க கேட்டவருக்கு கண்கள் கசிந்தன.

'எப்பேர்ப்பட்ட பெண்? இத்தனை உதாசீனங்களையும், துயரங்களையும் சுமக்க எப்படி முடிகிறது? இந்த காலத்தில் எத்தனைப் பெண்களுக்கு பொறுமை இருக்கிறது? சொந்தமாய் தொழில் நடத்தி, சொந்த வீட்டிலேயே அந்நியப்பட்டு, ஆனால் தன் கடமையுணர்ந்து பெற்றவர்களின் மனம் குளிர்விக்க.... ஆண்பிள்ளைக்குக் கூட மனசு வராதே! இப்படிப் பட்ட பெண் தேவாவுக்கு மனைவியாய் வாய்த்தால் எப்படி இருக்கும்? தேவா நான் சொன்னால் மறுக்கப் போவதில்லை!'

தன் எண்ணத்தை மெல்ல சாமுத்ரிகாவிடம் சொன்னார். உண்மையிலேயே அவ்வளவு சந்தோஷப்பட்டாள்.

''சிந்து ரொம்ப நல்லப் பெண் அங்கிள். இந்தக் கல்யாணம் நடந்தா.. ரொம்ப சந்தோஷப்படுவேன்''

''இங்கேயே பேசி முடிச்சிடலாம்..''.

நேரமாக சாமுத்ரிகா இங்கேயும், குலசேகரன் அங்கேயும் சென்றுவிட்டனர்.

குலசேகரன் சம்மந்தியின் திருமணம் முடிந்ததும் மனைவியுடன் ஆசீர்வாதம் வாங்கினார். தொடர்ந்து சம்பிரதாய வைபவங்கள் நடந்தன.

குலசேகரன் மனைவியை தனியே அழைத்து வந்தார்.

''வாசுகி... இங்கே ஒரு பொண்ணைப் பார்த்தேன். நம்ம சாமுத்ரிகா இருக்காளே... அதான் சாந்தினியோட புகுந்த வீட்டு சொந்தம்''

''ஓ. டாக்டரா இருக்காளே...''

''அவளேதான். அவளோட நாத்தனாராம். நம்ம தேவாவுக்கு சரியா இருப்பா....''

வாசுகியின் முகம் மாறியது.

''அவளோட புருஷன் வீடு நடுத்தரக்குடும்பம்னு....''

''அதுக்கென்ன இப்ப? பொண்ணு தங்கம்! அதானே வேணும்! முதல்ல பாரு...''

இங்கேயும், அங்கேயும் பட்டாம்பூச்சியாய் ஓடிக் கொண்டிருந்தவளை சுட்டிக் காட்டினார்.

வாசுகியின் நெஞ்சம் சந்தோஷத்தில் ஏறி இறங்கியது.

''இவளா?''

''எப்படி? ''மனைவியை ஏறிட்டார்.

''மனசுக்கு நிறைவா இருக்கா....''

அதுபோதும் வாசுகி

என்றவர் சிந்து அறியாமல் தன் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவராய் கூப்பிட்டு அவளைக் காட்ட.. அத்தனை பேருக்கும் பிடித்திருந்தது. விமலா உள்பட சுனந்தாவிற்கு மட்டும் காட்டவில்லை.

''தேவா எங்கே ரஞ்சன்?''

''மதிய லஞ்சுக்கு ஏற்பாடு செய்யறேன்னு ஹோட்டல் வரை போயிருக்கான்ப்பா!''

அதன்பின் மனைவி, மகன்கள், மருமகள்களுடன் விஸ்வநாதன் திருமணத்திற்குச் சென்றனர்.

அங்கும் திருமணம் நடந்து முடிந்து விட்டிருந்தது. சிந்து வாசுகியைப் பார்த்து விட்டு அருகில் ஓடி வந்தாள்.

''வாங்கம்மா!''

குலசேகரன் மனைவியை வியப்பாய் நோக்க... ''அதை அப்புறம் சொல்றேன்'' என்றாள் மெல்லிய குரலில்.. குறும்பு மின்ன.

சாமுத்ரிகா ஆரவாரத்துடன் வரவேற்று மாமனார், மாமியாரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தாள். அவரின் அந்துஸ்து கருதி பிரம்மிப்புடன் எழ முற்பட்டார் விஸ்வநாதன்.

''அட எந்திரிக்காதிங்க மாப்பிள்ளை!'' என்று தோள் பற்றி அழுத்தி



சிநேகமுடன் சிரித்தார்.

அவரின் பேச்சும் அணுகுமுறையும் விஸ்வநாதனைக் கவர்ந்தது.

உறவு, பிஸினஸ் என்று பேச்சு ஓடியபின். மெல்ல விஷயத்திற்கு வந்தார். சாமுத்ரிகாவிற்கு ஜாடை காட்ட... அவள் மாமனார் அருகே குனிந்து காதில் சொன்னாள்.

''நம்ம சிந்துவை அவங்க குடும்பத்துல எல்லாருக்கும் பிடிச்சுப் போச்சாம். அவங்க கடைசிப் பிள்ளைக்கு சிந்துவை பெண் கேக்கறாங்க மாமா!'' என்றாள்.

ஒரு கணம் எதுவும் புரியவில்லை விஸ்வநாதனுக்கு சற்றுத்தள்ளி.. பொருட்களை பையில் அமுக்கிக் கொண்டிருந்த சிந்துவைப் பார்த்தார்.

தேனீப்போல் சுழன்று சுழன்று வேலை செய்த விதம். கண்களில் பெற்றவர்களின் ஒரு புன்னகைக்காக தவமிருக்கும் ஏக்கம்.

''அவள் எனக்கு மகனாய் பிறந்ததைத் தவிர என்ன தவறு செய்து விட்டாள்? ஜோஸியக்காரன் என்ன இவளின் தலைவிதியை மோசமாய் எழுதி விட்டான்? எச்சரிக்கையும், புத்திசாலித்தானமுமின்றி நான் செயல்பட்ட விதம் என் தொழிலை கவிழ்த்துவிட்டது. அதற்காக.. இவளின் இருபது வருட வாழ்க்கையை கனக்க செய்துவிட்டேனே! நான் விஷமாய் வெறுத்தும்... இதோ.. பெரும்பாலான பெற்றவர்களின் ஆசையை.. பலர் வாழ்க்கையில நிறைவேறாமலே கடந்து விட்ட ஆசையை.. ஆண்மகன் போல் எடுத்து செய்து மகிழ்விக்க.....எவ்வளவு அன்பிருக்க வேண்டும்? இதுவரை இவளுக்கென்று எதையும் வாங்கிக் கொடுத்ததில்லை. மற்ற பிள்ளைகளுக்கு தின்பண்டம் வாங்கித் தந்து இவளை பார்க்க வைத்து ஒதுக்கி வைத்த மோசமான அப்பா நான்!

ஆனால் என் மீது எப்படி வந்தது பாசம்? என் வாழ்க்கைக்கே குறையாய் நினைத்த உயிர்தான்.. இன்று ஒரு குறையுமில்லாமல் அறுபதாம் கல்யாணத்தை நடத்தியிருக்கிறது. வெட்கத்தோடு.. பெற்றவனாய்... லட்சணமாய் அவள் திருமணம் பற்றி யோசித்திருக்க வேண்டும். ரெண்டு குழந்தைகளை கரையேற்றியதோடு என் கடமை முடிந்தது என்று நினைத்து விட்டேனே!

வீடு தேடி வந்த அந்த தேவா பையனையும் மோசமாய் பேசி அனுப்பினேனே! கண்ணியமாய்தானே நடந்துக் கொண்டான்? பாஸ்கர் காதலை ஏற்ற என்னால்... ஏன் இவள் விஷயத்தில் மட்டும் மோசமாய் நடந்தேன்? நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று மணிவிழா அழைப்பிதழில் தன் பெயரைக் கூட போட்டுக் கொள்ளவில்லை என்றால்... அவள் இதயத்தை எந்தளவு உடைத்திருப்பேன்? இதோ... நினைத்தே பார்க்க முடியாத வாழ்க்கை அவளின் நடவடிக்கைக்காக தேடி வந்திருக்கிறது. இனியாவது அவள் அமோகமாய் வாழ வேண்டும். ''கண்களில் நீர் திரையிட்டது.

கணவனின் மனவோட்டத்தைப் புரிந்துக் கொண்ட கமலியும் கண்ணீர் உகுத்தாள்.

''மாமா..'' சாமுத்ரிகா மறுபடி அழைத்தாள்.

''ம். சொல்லும்மா!''

''நீங்கதான் மாமா.. சொல்லணும்!''

''என் பொண்ணு சிந்துவுக்கு பிடிச்சிருந்தா எனக்கும் சம்மதம்!''

அந்த வார்த்தையைக் கேட்டு, சாமுத்ரிகா, பாஸ்கர், கமலி அத்தனை பேரும் ஆச்சர்யப்பட்டனர்.

சிந்துவை என் மகள் என்று கூறிவிட்டாரே!

அடுத்து நடந்தது இன்னும் ஆச்சரியம்.

இது எதுவும் அறியாமல்... பொருட்களை ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தாள் சிந்து.

விஸ்வநாதன் அழைத்தார்.

''சிந்து''

ஒரு கணம் திடுக்கிட்டவள்.. பிரமை என எண்ணி மறுபடி வேலையில் மூழ்க..

''அம்மாடி சிந்து ''என்றார்

விலுக்கென திரும்பினாள்.

இரண்டு கைகளையும் நீட்டி 'வா'வென அழைக்க.... நடப்பதை நம்பவே முடியாத சிந்து... நெஞ்சம் படபடக்க அப்பாவிடம் சென்றாள்.

''அ..அப்பா... என்னையா.. என்னையா பேர் சொல்லி கூப்பிட்டீங்க?''

''உன்னைத்தான்டா...''

''அப்பா!'' நெகிழ்ச்சியில் கண்கலங்க.. அவர் காலில் விழுந்தாள்.

''அமோகமா இருப்பே தாயி.. இந்த அப்பாவை மன்னிச்சிட்டேன்னு சொல்லு!''

''ஐயோ...அப்பா!''

சாமுத்ரிகாதான் சூழ்நிலையை உணர்த்தி, ''மாமா...இங்கே இதைப் பேச வேண்டாம். கல்யாண விஷயம் மட்டும் கேளுங்க..''

''என்ன விஷயம் அண்ணி?''

கமலி மகளின் கன்னத்தை வருடியபடி, ''இதோ, இவங்களோட மகனுக்கு உன்னை கல்யாணம் பேச வந்திருக்காங்க... உனக்கு பிடிச்சிருந்தா சம்மதம்னு அப்பா சொல்லிட்டார். உன் விருப்பம் என்னம்மா?''

''எனக்குன்னு எந்த தனிப்பட்ட விருப்பமும் இல்லேம்மா! நான் எப்பவும் உங்கப் பொண்ணு. உங்களுக்கு பிடிச்சிருந்தா மட்டும் போதும்! அப்பா சொன்னா என்ன வேணும்னாலும் செய்வேன்.''

''அப்புறமென்னங்க....எங்க வீட்டுப் பொண்ணு சம்மதிச்சிட்டா. உங்க பையனை கூப்பிடுங்க. பொண்ணும், பையனும் பார்த்துக்கட்டும். ஆமா...எங்கே உங்க பிள்ளை? கண்ணிலேயே படலையே!'' என்றாள் சாமுத்ரிகா.

''ஹோட்டலுக்கு போனான். இன்னும் காணோம்.''

''அதோ....வந்துட்டான்.'' என்ற வாசுகி மகனை நோக்கி ஓட..சிந்து தலைகவிழ்ந்து கொண்டாள்.

மகளின் கையை பற்றி அன்புடன் தடவிக் கொடுக்க, உலகமே மறந்த நிலையில் இருந்தாள் சிந்து.

வாசுகியோடு சுஜாதா, விமலா, சாந்தினி எல்லோரும் சென்று தேவாவை வழிமறித்து விஷயத்தைக் கூறினர்.

''உங்க இஷ்டம்ப்பா!'' என்று அன்று அப்பாவிடம் கூறிவிட்டானே ஒழிய.. அவனால் வேறொரு பெண்ணுடன் திருமணம் என்பதை உள்ளம்



சகித்துக் கொள்ள மறுத்தது. இதென்ன புது வம்பு? என்பது போல் திணறினான்.

''என்னம்மா இது...திடீர்னு யாரையோ பார்த்து முடிவு பண்ணிட்டேன்னு சொல்றது நல்லாவா இருக்கு?''

''பொண்ணு நல்லாருக்கா தேவா!''

''அதுக்காக...?''

''அப்பா வாக்கு குடுத்துட்டார்ப்பா...!''

''அதெப்படிம்மா...என்னைக் கேக்காம...''

அதற்குள்... மணமேடையை அடைந்துவிட்டனர். குலசேகரன் மகனின் அருகில் வந்தார்.

''இதாம்ப்பா பொண்ணு...பார்த்துட்டு சொல்லு..!''



''ஸ்வாமி ஜி தற்போது என்ன பண்ணிட்டு இருக்கார்?''

''பிரா''ர்த்தனையில் தன்னை முழுக்க ஐக்கிய படுத்திக் கொண்டுள்ளார்''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி.

தேவா ஏறிட்டான். சிந்துவும் மெல்ல அவனை நோக்க.... இருவருக்கும் மிகப்பெரிய இனிய அதிர்ச்சி.கூடவே விஸ்வநாதனுக்கும்!

''நான் உங்க பிள்ளைப்பா.. வாக்கு என்ன வாக்கு... பாக்கு வெத்தலையே மாத்திக்குங்க.. உங்களுக்குப் பிடிச்சிருந்தா போதும்ப்பா'' என்று அவசரமாகக் கூற... சுஜாதா, ''தோடா.. எவ்ளோ நல்லப்பிள்ளை நீ!'' என்று குறும்புடன் சிரிக்க....

தேவாவைப் பார்த்தபடி... ''தம்பி நீங்க...'' என்று பேச துவங்கிய விஸ்வநாதனின் காலில் விழுவதுபோல் காதில் கிசுகிசுத்தான் தேவா.

''சார்...போட்டுக் குடுத்துடாதீங்க''

''மாமான்னு சொல்லுப்பா!''

''என்ன...என்னவாம்? ''என்றார் குலசேகரன்.

''உங்கப் பொண்ணுக்கு சம்மதமான்னு கேட்டார்'' என்று சமாளித்தார்.

''அதைகேக்கத்தான் நான் இருக்கேனே..ஏம்மா... என் பையனை உனக்கு பிடிச்சிருக்கா?''

''ம்'' என்ற ஒற்றைச் சொல்லில் தலை கவிழ்ந்திருந்த சிந்துவின் நாணச்சிரிப்பில் கோடிப்பூக்கள் ஒளிந்திருந்தது.

சற்றுத்தள்ளி இன்னொரு வயதான ஜோடிக்கு திருமணம். மேளமும் நாதஸ்வரமும் முழங்க...

தேவாவும், சிந்துவும் யாரும் அறியாமல் பார்த்துக் கொள்ள...உடல் நரம்புகள் வீணை மீட்டின. சில அட்சதைகள் அவர்கள் மேல் வந்து விழுந்தன.

**முற்றும்**